





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீராம ஜெயம்







# திருவருள்மிகு மல்வில் கிருஷ்ணன் கோயில்

**இயக்கச்சி**

## தர்மகர்த்தா கார்த்திகேசு சின்னத்தம்பி

நினைவு அறக்கட்டளை, அறங்காவலர் தினத்தில் வெளியிடும்

# சுதர்சனம்

(சின்னத்தம்பி ஐயாவின் 14-ம் ஆண்டு நினைவு நாள்)

**- 2022 -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



## விநாயகர் துதி

பேராலை விநாயகனே
பெருவயிறன் கணபதியே
காராளர் ஏத்தும்எங்கள்
கற்பக விநாயகனே.

ஆராரோ ஆரிவரோ
என்றென்னெத் தாலாட்டி
சீராட்டி வளர்த்த அன்னை
பூமாலை சாத்தி டென்றாள்.

பூமாலை சாத்தியே
மாயவனை ஏத்திடும் நான்
பாமாலை சாத்திடவும்
நீயெனக் கருள்புரிவாய்.

ஆசிரியமணி பேராலையூர்
**ந. தாமோதரம்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மறைந்தும் மறையாது என்றுமெம் மனங்களில் நிறைந்தவர்



# கார்த்திகேசு சின்னத்தம்பி

மாயவன் தாளடைந்த நாள்

**03 * 04 * 2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி...

பண்டைய வரலாற்றை பளிச்சென எடுத்தியம்பும் புராதன சின்னங்களையும் வண்ண எழில் கொண்ட செந்நெற் காணிகளையும் கண்கவர் காட்சிகளையும் களிப்போடு கண்டு ரசித்து இயற்கையோடு இணைந்து வாழும் இனிய நன்மக்களைக் கொண்ட எழில்மிகு பிரதேசமே பச்சிலைப்பள்ளி பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் நிகரற்ற வளம் கொழிக்கும் இயக்கச்சிப் பிரதேசத்தில் அனைவராலும் வாஞ்சையுடன் அறியப்பட்ட ஒருவரே கார்த்திகேசு சின்னத்தம்பி அவர்கள்.

இறைபக்தி மிகுந்த அமரர் கார்த்திகேசு சின்னத்தம்பி அவர்கள் வரலாற்றுப் பெருமைகளை தன்னகத்தே கொண்டு ஊரின் மத்தியில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் மல்வில் கிருஷ்ணன் ஆலயத்தில் 1967 இறுதி வரை தர்மகர்த்தாவாக இருந்து ஆலயத்தின் வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றினார். இவரது கடமை உணர்வும் கண்ணியமும் கட்டுப்பாடும் இவரது வாழ்க்கைப் பக்கத்தில் மறக்கமுடியாத பக்கங்கள். விடியும் பொழுது யாருக்காகவும் எதற்காகவும் நிற்பதில்லை என்பதை உணர்ந்து தன் ஒவ்வொரு பொழுதையும் பரந்தாமன் சேவைக்காக செலவழித்தவர். யுத்தகாலத்தில் கூட இவர் ஆலயத்திற்காக அல்லது கடமையில் இருந்து சற்றும் பின்னடையாது பூஜை வழிபாடுகளை சிறப்பாக மேற்கொண்டு 2008 இல் இயற்கை எய்தினார்.

இவரது மறைவின் பின்னர் ஆலயத்தில் நிர்வாகம் அமைக்கப்பட்டு ஆலயவளர்ச்சிக்கான புதியதோர் பரிமாணம் பெற்றது. இயக்கச்சிக் கிராமத்தில் வாழ்ந்து வரலாறாகிய சின்னத்தம்பி அவர்களின் சமூகப் பணியினையும் பெறுபேற்றினையும் கௌரவிக்கும் நோக்கில் இந்நூல் வெளியிடுவதையிட்டு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவிப்பதுடன் இந்நூல் உருவாக்கத்தில் பங்காற்றிய அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மனிதர்கள் மறைந்து விட்டாலும் அவர்களைப்பற்றிய நினைவுகள் என்றும் நினைவில் நிலைத்திருக்கும், எம்மனதில் நிழலாடிக் கொண்டிருக்கும்.

**சி.க. கிருஷ்ணேந்திரன்**
பிரதேசசெயலாளர்,
பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

மல்வில் கிருஷ்ணன் ஆலய தர்மகர்த்தா தலைவர் மற்றும் நித்திய பூசகராக விளங்கிய அமரர் கார்த்திகேசு சின்னத்தம்பி அவர்களை நினைவு கூரும் முகமாக வெளியீடு செய்யப்படும் இம் மலருக்கு வாழ்த்துரைக்கும் வாய்ப்புக்கு நன்றி தெரிவிப்பதுடன் எம் பெருமான் சமுத்திர தீர்த்தமாடும் வடமராட்சி கிழக்கின் கொடுக்கிளாய் பதியை பூர்வீகமாகக் கொண்டவன் எனும் வகையில் இம் மலரின் வெளியிடுகை எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

வடமராட்சி கிழக்கு மக்கள் குறிப்பாக மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை மற்றும் வெற்றிலைக்கேணி கிராமங்களில் வதியும் மக்கள் மேற்படி சமுத்திர தீர்த்தோற்சவம் இடம்பெறும் கொடுக்கிளாய் கிராமத்தவர்களுடன் இணைந்து மல்வில் மாயவனின் சமுத்திர தீர்த்தோற்சவத்தினை சிறப்பாக நடாத்துவதற்கு அமரர் சின்னத்தம்பி ஐயாவின் வழிகாட்டலும் ஒத்துழைப்பும் இன்றியமையாதது. மேலும் இத் தீர்த்தோற்சவத்தில் இயக்கச்சி, முகாவில், சோரன்பற்று மற்றும் மாசார் மக்களின் பங்குபற்றுதலும் முக்கியத்துவமானது.

எமது வடமராட்சி கிழக்கு பிரதேச மக்களுடன் மிக அன்பாகவும் அன்னியோன்னியமாகவும் பழகுவதன் மூலம் எம்மவர்க்கும் ஆலயத்திற்கும் இடையில் ஒரு ஆத்மார்த்தமான பிணைப்பை ஏற்படுத்தியவர் சின்னத்தம்பி ஐயா என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எம்மவரோடு மட்டுமன்றி ஏனையோருடனும் அவ்வாறே பழகுகின்ற ஒருவராக ஐயா விளங்கினார். நானும் எனது தந்தையாருடன் மாயவனிடம் வருகின்ற பொழுது ஐயாவும் எனது தந்தையாரும் அன்னியோன்யமாக உரையாடி மகிழ்வதை நினைத்துப் பார்க்கின்றேன்.

தினமும் மல்வில் மாயவனின் திருமேனி தீண்டி பூசிக்கும் பேறுபெற்ற சின்னத்தம்பி ஐயாவின் கனவு நனவாகி இன்று ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிதள கோபுரத்துடன் மூலஸ்தானம், உயர்ந்த மணிக்கோபுரமும், அழகிய வசந்த மண்டபம் மற்றும் பரிவார மூர்த்திகள் நவக்கிரதங்களுக்கான ஆலயங்கள் என்பன கொண்டமைந்து சிறப்பாக விளங்குகின்றது.

ஆலயங்களானவை வெறுமனே ஆன்மீகப் பணியுடன் நின்றுவிடாது சமூகப் பணியையும் ஆற்ற வேண்டும் என்ற கருத்திற்கிணங்க அறநெறிப் பாடசாலையை ஆரம்பித்து நடாத்தியமை தூர இடங்களிலிருந்து வருகின்ற அடியார்களுக்கு உணவளித்தமை, பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு உதவுகின்றமை மற்றும் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தமை என்பவற்றையும் ஐயா மேற்கொண்டதை நினைவுகூர முடியும்.

**வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

என்கின்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க இன்று மல்வில் மாயவனின் பாதாரவிந்தங்களை சென்றடைந்துவிட்ட சின்னத்தம்பி ஐயாவின் 40 வருடங்களுக்கு மேலான ஆன்மீகப் பணி மற்றும் சமூகப் பண ியென்பன என்றும் அன்பர்களால் நினைவு கூரப்படும் என்பது திண்ணம்.

பசுபதி தயானந்தன்
உதவி பிரதேச செயலர்,
வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை.
(முன்னாள் உதவிப் பிரதேச செயலர், மருதங்கேணி.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியமணி ந. தாமோதரம்பிள்ளை அவர்களின் எண்ணத்திலிருந்து மல்வில் கிருஷ்ணன் ஆலயம்

தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை என்பர். எனது தாயார் மாயவனுக்கு மாலை சாத்துவித்து வணங்கி வா என்று கூறினார் அதன்படி நடந்து வந்த நான் பாமாலை சாத்தவும் ஆசை கொண்டேன். சில கவிதைகளை எழுதினேன். நான் இலக்கணமோ இசையோ கற்ற பண்டிதனோ வித்துவானோ அல்லன். ஆதலால் கவிதைகளை உடுவிலில் விலியன் நமச்சிவாயம், சுன்னாகம் திருமதி. சிவானந்தன் (சங்கீத இரத்தினம்) சிவஅன்பர் புலவர் க.குமாரசாமி, பேராலை அண்ணாவி முத்தையா ஆகிய பெரியோர்கட்கு காட்டினேன். குற்றங்களைந்து குணங்காணல் கற்றறிந்தோரின் பெருங்குணம் ஆகையால் 'நன்று நன்று' என்று பாராட்டினர். சிவ அன்பர் திரு.க.குமாரசாமிப்புலவர் அவர்கள் அணிந்துரை தந்துதவினார். தர்மகர்த்தா சபை மலர் வெளியீட்டு விழாவை சிறப்பாக நடத்த முன்வந்தது.

கிளி/இயக்கச்சி அ.த.க பாடசாலை கூட்டுப்பிரார்த்தனை நடத்த முன்வந்தது.

இவ்வாறு இச்சிறு முயற்சிக்கு பேராதரவு தந்தவர்கள் பலர். இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அனைவரது உள்ளத்துள்ளும் நின்று எனது முயற்சிக்குத் துணைபுரியுமாறு தூண்டிய மாயவன் திருப்பாதத்தை சிரந்தாழ்த்திக் கரங்கூப்பி வணங்குகின்றேன்.

ஒரு நாமம் ஓர் உலகம் இல்லாத எம்பெருமானுக்கு மாதவன், மாயவன், நாரணன், சாரங்ககாணி, சங்கமேந்தி, பஞ்சாயுதன் என்றும் பற்பல நாமங்கள் கூறி பக்தி சிரத்தையுடன் வழிபட்டு இட்ட சித்திகள் பெறும் ஆலயங்களுள் மல்வில் கிருஷ்ணன் ஆலயமும் ஒன்றாகும்.

இவ்வாலயம் இயக்கச்சியிலிருந்து வடமேற்குத் திசையில் ஒன்றரை மைல் தொலைவில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் அமைந்துள்ள ஊர் மல்வில், அதில் ஓர் இடம் சங்குகேணி இப்பகுதி ஆதிகாலத்தில் அடர்ந்த சோலைக்காடாக இருந்தது.

சோலையின் நடுவே சங்குகேணி என்னும் இடத்தில் இவ்வாலயம் இருந்ததாகவும் ஒல்லாந்தப் போர்வீரர் அங்கே தங்கி அடியார்களைத் துன்புறுத்தி வந்ததாகவும் எம்பெருமான் திருவிளையாட்டால் போர்வீரர் தமக்குள் தாமே போரிட்டு மாண்டு மடிந்ததாகவும் மானிடர் மாண்டு மடிந்த இடம் ஆலயத்திற்கு உகந்ததன்று எண்றுணர்ந்த அடியார்கள் இவ்விடத்தில் ஆலயம் எழுப்பியதாகவும் கர்ணபரம்பரைக் கதை ஒன்றுண்டு.

சங்கேந்திய பெருமாள் எழுந்தருளிய இடம் சங்குகேணி வில் ஏந்திய சாரங்கன் உறையும் ஊர் மல்வில். பச்சிலையில் பள்ளி கொள்ளும் பரந்தாமன் பள்ளிகொள்ளும் பிரவு பச்சிலைப்பள்ளி. ஆழியும் வளையும் ஏந்திய கண்ணன் தீர்த்தமாடும் சமுத்திரம் ஆழியவளை.

இவற்றை நோக்கும்போது ஊரெல்லாம் அவன் பெயராய் உளமெல்லாம் அவன் உருவாய் அங்கிங்கென்னாதபடி இத்தலம் மூர்த்தி, தல, தீர்த்தமகிமை உடையது என்பது உணரத்தக்கது.

இறைவனைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டலாமேயன்றிச் சொல்லில் அடங்காத இறைவனைச் சொல்லப்புகின் உண்மையான இறை பொய்யாகிவிடும்.

உதாரணமாக வெப்பத்தை எடுத்துக் கொள்வோம். வெப்பம் உண்மையானது., கண்ணால் காணமுடியாதது. இதைச் சொல்லில் விளங்கப்படுத்துவது எப்படி? வெப்பமென்றால் சுடும் என்று சொல்லலாம். சுடும் என்றால் துவக்கென்றும் விளங்கலாம். ஆதலால் வெப்பத்தை உணர வேண்டுமாயின் நாமே வெப்பத்தை அணுகி நாமே தீண்டி நாமே உணரவேண்டும்.

நாம் நாளும் பொழுதும் ஆலயம் சென்று பக்தி சிரத்தையுடன் பாடித்துதித்து திருப்பணி வேலையை முறைப்படி செய்து அவனருளாலேயே அவனை உணர்ந்து, அவன் கருணையைப் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து விண்ணில் நல்ல கதி அடைவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்வில் உறைபவனே
மாயவனே உன்னை நிதம்
சொல்லில் வினையகலும்
தூயவனே கண்ணா என்று

கண்ணா கண்ணா என்று
பாஞ்சலி கதறி அழ
வண்ண வண்ணச் சேலைநல்கி
மானமதைக் காத்தவனே

பார்த்தனுக்குச் சாரதியாய்ப்
பாண்டவரைக் காத்தவனே
பார்தனில் எம்மை நிதம்
பக்குவமாய்க் காப்பவனே.

ஆழியவளை தன்னிலே
ஆழ்கடலில் தீர்த்தமாடி
அடியார்க் கருள் சுருக்கும்
ஆயர்பாடி மாதவனே.

மல்வில் தலம் ஒருக்கால்
வந்து தொழுமின்
மாயவன் திருவருளைப்
பெற்று உய்யுமின்.

மந்தியினம் கொஞ்சி
விளையாடும் சோலையில்
குந்தியின் மருகனவன்
கோயில் கொண்டனன்.

நாரணனர் தேவியொடு
ஆடும் வாவியில்
நாடோறும் நீராடிப்
பாவந் தொலையுமின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்யென்று
அன்று சொன்னவன்
கண்ணனவன் சொற்படி
நடந்து உய்யுமின்.

பச்சிலையில் பள்ளிகொள்ளும்
பரந்தாமா நீயே வந்து
பச்சிலைப் பள்ளியிலே
பள்ளிகொண்ட மாயமென்ன

எச்சிலை உண்டவனின்
மைத்துனனே கண்ணாநீயே
கற்சிலையாக நின்று
கருணை மழை பொழிவாய்.

ஆழியும் வளையும்
ஏந்திய கண்ணன்
ஆழிய வளையில்
ஆடுவான் தீர்த்தம்.

ஆழ்கடல் தன்னில்
ஆடியே தீர்த்தம்
மூழ்கிடேல் பிறவியில்
என்றருள் செய்வான்.

பக்தர்கள் உள்ளத்தைக்
கொள்ளை யடிப்பான்
பக்தி வலையில்
அகப்படும் மாயன்.

பள்ளித் தோழனும்
குசேலனின் வறுமை
துள்ளி ஓடிடச்
செய்தவன் கண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்சனைப் போரினில்
வென்றவன் அவனே
வம்சம் தழைத்திட
அருளிடும் மாயன்.

காளிங்கன் மீது
நடமாடும் மாயவன்
ஊழின் பெருவலி
போக்கிடும் மாயவன்.

தாயைப் பிரிந்து
வாழ்ந்தவன் கண்ணன்.
தாய்க்குத் தாயாய்
உள்ளவன் கண்ணன்.

சேலை உரிந்திடத்
திரௌபதை கதற
வேலை அலையெனச்
சேலை அளித்தான்.

கலியுக முடிவினில்
கல்கியாய் வருவான்.
எலியுரு வாகனன்
கணபதி மாமன்

மணிஓசை கேட்கிறது - மல்வில்
மணி ஓசை கேட்கிறது
ஓம்! ஓம்! ஓமென்றெலிக்கிறது - அங்கே
ஓங்காரந் தொனிக்கிறது.

ஓங்காரத் துட் பொருளாய்க் - கண்ணன்
உலகினைக் காக்கின்றான்
காத்தருள் கண்ணனை நீர் - மல்வில்
தலமிசை தொழுவீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுதிடும் அடியவர்க்கு - கண்ணன்
இடர்பல களைகின்றான்
இடர் பல களைந்திடவே - மல்வில்
தலமிசை வாரீரோ!

மல்வில் உறையும்
மாயவன் தன்னைச்
சொல்லித் துதிப்பவர்க்
கில்லையே துன்பம்.

சொல்லில் உறைந்து
தன் புகழ் சொல்லும்
சொல்லின் செல்வன்
மல்வில் கிருஷ்ணன்

கல்லும் கரையும்
உள்ளம் உருகும்
மல்வில் கிருஷ்ணன்
மகிமை சொல்லில்.

மல்வில் செல்லில்
இல்லில் இன்பம்
பல்கிப் பெருகும்
என்பது உண்மை.

கண்ணனைக் கண்டோம் மென்று
களிபேருவகை கொண்டு
கண்ணனின் கோயில் வாயில்
கூடின ரடியா ரெல்லாம்.

கண்ணனை நானும் காணக்
கருதியே கண் திறந்தேன்
கண்ணனைக் கண்டே னில்லைக்
கற்சிலை ஒன்று கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனைக் காணக் கோடி
கண்கள் தான் வேண்டுமென்றே
கண்ணனின் கோயில் வாயில்
கதறி நான் ஏத்திநின்றேன்.

"கண்ணனைக் காணக் கோடி
கண்கள் தான் வேண்டுமென்றே
கண்ணனின் கோயில் வாயில்
கதறி நான் ஏந்திநின்றேன்.

"கண்ணனைக் காணக் கோடி
கண்கள் தான் வேண்டிடுமோ
கடமையே கண்ணா யுள்ளார்
கண்ணனைக் காண்பார்" என்றான்.

மல்வில் வீதியிலே
மாயவனார் தேரி லேறிச்
செல்லும் காட்சியினைக்
கண்டு களித்திடடி.

கொட்டும் மேளம் கொட்டுதடி
கோயில் மணி ஒலிக்குதடி
கட்டழகன் கண்ணனவன்
தேரிலேறி வாறாரடி.

ஆனிரையின் வண்டியிலே
அழகான தேர்சமைத்து
ஆயர்பாடி மாயவனார்
அதிலேறி வாறாரடி

அன்பெனும் வடம் பிடித்து
அரோகரா என்று சொல்ல
அன்பரின் பின்னே அவன்
ஓடி ஓடி வாறானடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர்கள் முன் இழுக்க
முதியோர்கள் பின் இழுக்க
மாயவனார் புன் முறுவல்
செய்வதை நீ பார்த்திடடி.

போட்டி பொறாமையை நீ
பூண்டோ டழித்திடடி
காட்சி யளிப்பானடி
கண்ண னவன் தேரினிலே.

மாங்கல்யம் வேண்டிடுமோ
மகப்பேறு வேண்டிடுமோ
என்ன வரம் வேண்டினும் நீ
தேரடிக்கு வந்திடடி.

மனிதனாய் வாழ்ந்தது
போதுமினிக் கண்ணா
உன்னடி சேர்ந்திட
அருளுவாய் கண்ணா.

போட்டி பொறாமையின்
உருவம் - மனிதன்
போக்கிலித் தனங்களின்
புகலிடம் அவனே.

நாட்டுக் குழைக்கிறேன்
என்பான் - அவன்
நாட்டைச் சுரண்டியே
ஏப்பம் விடுவான்.

தன்பிழை தான்
உணராதான் - அவன்
பிறர் பிழை காண்பதில்
நிபுணனாய்த் திகழ்வான்.

காதலோ காதல்
என்றிடுவான் - அவன்
கடைசியில் ஸ்ரீதனக்
கதையிலே முடிப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பனே தோழனே
என்பான் - அவன்
ஆபத்து வேளையில்
கைவிட்டுச் செல்வான்.

சாதியும் சமயமும்
பேசிப் - பெரும்
சண்டைகள் செய்துமே
கோட்டிலே நிற்பான்

மாண்புடை மனிதரும்
உண்டு - அவர்
யாரெனக் கண்டிட
மீற்றரும் இல்லை.

கோவிந்தன் பெயரை நாம்
கூசாமல் கூறிடின்
நாவில் வந்துறைந் தவன்
நற்றமிழ் நல்குவான்.

கோவிந்தா! மாதவா!
மாயவா! கேசவா!
மல்வில் பதியுறை
நாராயண நமோ.

நாராயண என்று
நாவை அசைத்திடில்
ஓராயிரம் பிணி
உடனே அகலுமே.

வெம்பகை நீங்கிடும்
வீரம் தழைத்திடும்
நம்பிக்கை யோடவன்
நாமத்தைச் செப்பிடில்.

மங்களம் பொங்கிடும்
வானம் பொழிந்திடும்
சங்கொடு சக்கரன்
நாமத்தைச் செப்பிடில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத்தால் உயர்ந்தோன் - உலகம் உள்ளவரை வாழ்வான்

தனது உள்ளத்தாலும் உடலாலும் தீயவற்றைச் சிந்திக்காது என்றும் யாவருக்கும் நல்லனவற்றைச் சிந்தித்து செயற்படுத்தும் ஒருவனை உலகம் எப்பொழுதும் நினைவுகூரும் என்பதற்கு மல்வில் கிருஸ்ணர் ஆலய தர்மகர்த்தா அமரர் கார்த்திகேசு சின்னத்தம்பிக்கு நிகராக எம்மால் யாரையும் நினைவுகூர முடியாதுள்ளது. மல்வில் கிருஸ்ணருக்காகவே தன்னை, தன் உடலை, எக்காலமும் அர்ப்பணித்து, காண்பவர்கள் மனங்களில் இடம்பிடித்த ஒரு உத்தமராகவே அமரரை யாவரும் நினைவு கூருகின்றனர்.

மேற்குறித்த வகையில் அமரரின் சிரார்த்த தினமாகிய சித்திரை (ஏப்ரல்) வருடம் மூன்றாம் திகதி அவரது ஞாபகார்த்தமாக ஒரு எழுத்து மூலமான ஆவணமொன்றை வெளியிட ஆலய நிருவாகசபை உறுப்பினர்கள் எடுத்த முயற்சியால் யானும் ஒரு அடியவனாக இணைந்து கொள்வதற்கு கிடைத்த சந்தர்ப்பம் வாழ்நாளில் மாயக் கிருஸ்ணன் எனக்கு அளித்த பெரும் பேறாகக் கருதுகின்றேன். எனது சிற்றறிவுக்கு எட்டிய வகையில் கிடைத்த தகவல்களின் படியும் அவரோடு பழகிய காலங்களை உள்ளடக்கியும் இந்தத் தகவல்களைத் தருகின்றேன். மல்வில் கிருஷ்ணர் ஆலய பரம்பரையில் வல்லிபுரக்குறிச்சி முக்கிய பங்குவகித்தது. அமரர் கார்திதிகேசு சின்னத்தம்பி அவர்களும் வல்லிபுரக் குறிச்சியைத் சேர்ந்தவர். 1925ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ம் திகதி பிறந்த அமரர் தனது ஊரைவிட்டு மல்விலுக்கு வந்து கிருஸ்ணர் ஆலயத்தை பரிபாலித்து ஆலயத்தின் பூசகராக பணியாற்றிய காலத்தை இன்றும் யாவரும் நினைவு கூருவார்கள்.

அமரர் பூசகராகப் பணியாற்றிய காலத்தில் ஆலய மரத்தடியில் அமர்ந்து நாடிவருவோர்க்கு நல்லருள் புரிந்த மாயவனை தரிசிக்க அவனருள் பெற நாடெங்குமிருந்து அடியவர்கள் வந்தவண்ணமிருந்தனர். அமரரின் பூசையால் மாயவன் அருள் பல்கிப் பெருகிக் காணப்பட்டது. ஒருமுறை மாயவனை வந்து தரிசிப்பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர். அவரது பூசை முறையில் காணப்பட்ட ஒரு சிறப்பம்சம் என்றும் என்மனதில் பதிந்துவிட்டது. அடியவர்கள் நேர்த்திக் கடனுக்காக அர்ச்சனைப் பொருட்கள் கொண்டு வரும்போது அதனை வாங்கி உன்னிப்பாகப் பார்ப்பார். ஒரு வாழைப்பழம் தானும் கறுத்து இருந்தால் மறை ஏதும் காணப்பட்டால் அதனை திருப்பிக் கொடுத்துவிடுவார். இதனால் அடியவர்கள் காணிக்கைப் பொருட்கள் கொண்டு வரும்போது மாயவனை விட அமரருக்கே பயப்படுவதை அவதானிக்கலாம். அவ்வாறே மலர்களால் மாலை கட்டிவந்தால் ஏற்கமாட்டார். தானே மலரை வாங்கி மாலை கட்டுவித்தே மாயவருக்கு அணிவிப்பார். மாயவருக்கு செலுத்தப்படும் காணிக்கைகள் யாவும் மிகத் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதில் மிக மிக கண்டிப்பாக இருந்தவர்.

ஆலயத்திற்கு வருபவர்களை அவர்கள் எந்த அந்தஸ்தில் இருந்தாலும் யாவரையும் ஒரே சமமாக மதிக்கும் பண்புடையவர். அமரரில் காணப்பட்ட இத்தகைய பண்புகளை இன்றும் நினைவு கூர்பவர்களே அதிகம்.

எதிர்வரும் சித்திரை மாதம் 3ம் திகதி அமரரின் சிரார்த்த தினத்தை முன்னிட்டு மல்வில் ஆலயத்தில் நடைபெறவுள்ள நினைவு நிகழ்ச்சியை முன்னிட்டு அதனை ஒழுங்கு செய்யும் குழுவினரைப் பாராட்டுகின்றோம். அமரரின் உயர்வுக்கும் மாயவனின் அருள் அவர்மேல் என்றும் படிந்திருந்தமைக்கு இன்னுமொரு காரணத்தையும் நாம் கூறலாம்.

"பத்தாவுக்கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலும் கூடி வாழ்வார் இனிது"

அமரரின் மனைவியாக என்றென்றும் அவரது துணைவியாக ஆலயத்தில் மடைப்பள்ளி வேலைகள் அனைத்தையும் கணவருக்கே உகந்த முறையில், மாயவனின் மனதுக்கு ஏற்றமுறையில் செயற்படுத்தியவர் அவரது துணைவியாரே ஆலய பூசை நாட்களில், விசேடமாக ஞாயிற்றுக்கிழமைகளில் வருகை தரும் அடியவர்களுக்கு உணவளித்து உபசரித்து அனுப்பி வைப்பார். கணவனுக்கேற்ற ஒரு பதிவிரதை அமரருக்கு கிடைத்ததும் மாயவனின் அருட்கடாட்சமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னின் பின்னர் இயற்கை அனர்த்தங்களால் ஆலயம் இடிபாட்டையும், அதனை மீள் உருவாக்க மாயவன் சிந்தனையுடைய வாரிசு ஒன்றை மாயவன் கொடுத்துவிட்டுத்தான் செல்வான் என்பதை அமரர் நன்குணர்ந்திருந்தார். ஆம் இன்றைய ஆலய தர்மகர்த்தா கண்ணன் உதித்தது அமரரின் ஆன்மீகப் பற்றின் ஒரு வெளிப்பாடே.

மல்வில் கண்ணன் ஆலயத்தை உலகறியச் செய்த அமரர், விட்டுச் சென்ற பாதைகள், காட்டிய பூசை வழிமுறைகள், அடியவர்களை கவர்ந்திழுத்தல், அன்னதான நடைமுறைகள் யாவும் அமரரின் சிந்தனையால், வழிகாட்டல்களால் உருவானதே. அதனை இன்றும் செயலுருவம் கொடுத்து வழிநடத்திவரும் தர்மகர்த்தா கண்ணன், அவரது தாயார், பரிபாலனசபை உறுப்பினர்கள் அனைவரும் மாயவனின் அருட்கடாட்சதிற்குரியவர்களே.

மாயவனின் திருஅடியில்
**ப.அரியரத்தினம்,**
ஓய்வுநிலை மேலதிக
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமையான ஐயா!

ஆத்ம ஜோதியாக விளங்கும் சின்னத்தம்பி ஐயா
உங்கள் தடம் பதித்திட அரங்கேறுகின்றோம்

கணபதியை, கண்ணபெருமானை வணங்கி
அருள்தனைப் பெற்று, ஏட்டில் எழுதிட
நினைப்பவர் யாவரும் அனைத்தையும் பெற்றிட
அமரர் சின்னத்தம்பி ஐயா சுவட்டில் தடம் பதித்திட
இந்நாளில்.......

எமதருமை ஐயாவே!

மல்வில் மாயவனின் ஆலயத்தில் பூசகராய்
அறியாத அறிவிற்கு ஞானத்தில் ஆலோசகராய்
ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ கிருஷ்ணர் திருத்தலத்தின்
ஸ்தாபகர், பூசகராய் இருந்திட்ட

எமதருமை ஐயாவே!

நம்சிறுவயதில் பூவிதழ் எண்ணிக் கூறிட
தங்கள் ஞானத்தால் அறிவும் ஆற்றலும்
மிக்கவனாய் வாழ்வாய் எனும் உங்கள் வாக்கு
நல்லாசிகளாகி வழிகாட்டியாகி வையகத்தில்

எமதருமை ஐயாவே

வரலாறு படைத்து வாழ வைத்திடும்
புருசோத்தமர் புலம்புவதை அவர்வாக்கினில்
மொழிந்திடும் பூசாரிஜயா பிழைதனை பொறுத்து
எமக்கு எழுத அருளிடும் - எம் அருமை

எமதருமை ஐயாவே!

அன்று நாம் ஆலயத்தொண்டுகள் புரிகையில்
சிறு தவறுகள் ஏற்படின் உரத்த வார்த்தைகளில்
எமைப் பேசி வழிநடத்திடும் - எம் அருமை

எமதருமை ஐயாவே!

என் பிறப்பின் அடுத்தடுத்தாண்டு 1984ல் மல்வில் பதிதனை
பாலஸ்தானம் செய்து வெண்கற்களால் அத்திவாரம்
அமைத்திட்டு, ஆண்டுபல களித்து 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள ஸ்தாபனம் செய்து தானும் தன்துணைவியும்
ஏக புதல்வனும் என்னுடன் மேஸ்திரியுமாக
ஐவரும் ஆலயத்தின் நாள் வேலைதனை
ஆரம்பிக்க அனுமதித்த

எமதருமை ஐயாவே!

உள்நாட்டுக் குழப்பத்தின் பின் 2013ல் திருத்தலத்தினில்
கும்பாபிஷேகம் செய்ய பக்கபலமாய் நின்ற பங்காளிகளுடன்
தாம் நிழல்தனை தவித்திட்ட வேளைதனில்
தம் நிழல்தனை ஆசியாக அருள் வழங்கிய ஐயா
பிணி தீர்க்கும் விபூதிதனை பூசிட்டபின்
பிழை இன்றி ஞானம் தனை உரைக்க
இந் நாளில் எவர் உளர்....

எமதருமை ஐயாவே!

மேனிதனில் சட்டை அற்று 8 x 4 சால்வை
சண்டிக்கட்டுடனே திருமால் அவர் திருப்பாதங்களை
கழுவி, பூமாலை சூடிவிட்டு ஆலய கேடயம் அதில்
குதிக்கால் இரண்டும் தொடைமுட்ட பின்முதுகு
கேடயத்தில் முழங்கால் மீது முழங்கை பதித்து
வேளை எண்ணுவதை நாம் பார்த்து வியந்திட்ட

எமதருமை ஐயாவே!

என் அருமைத் தந்தைக்கு நம்பிக்கையின் நாணயமாய்
அயலவர்கள் உதவியுடன் உங்கள் பெயர் சொல்லும்
வாழ் பூமியினை வாங்கி வழங்கிய

எமதருமை ஐயாவே!

ஆமேயும் கூட்டத்திற்கு பொன்வள்ளி என
பெயர் வாகை சூடி ஒருகையில் கொக்கையுடன்
மறுகையில் மாங்கொடியுடன் மாயவன் புனித தீர்த்தம்தனை
சுற்றி நம் வீடுவந்து போவதை
எப்படி மறப்பது...

எமதருமை ஐயாவே!

ஆலயத்தில் அசம்பாவிதம் எனில்
அனைவரிடமும் ஆலோசனை கேட்டிட
ஊருக்குள் நுழைந்து ஓடோடி வந்திடும்

எமதருமை ஐயாவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை எளியவர் என பாகுபாடு காட்டாது
தூயமனதுடன் தன் அம்மையார் துணையுடன்
ஆலயத்தில் அரிசிதனை உலையில் இட்டு
அடியவர்கட்கு தாமரை இலைதனில்
அன்னதானம் வழங்கிடும்

எமதருமை ஐயாவே!

அந்நாளில் ஏடுதனை பதிந்திட மறந்திட்ட நாம்
இந்நாளில் தர்மகர்த்தா நிதியம் எனும்மடலை
வரைய மறக்கவில்லை - அதனால்
உருவாக்குகின்றோம் ஓர் நிதியம்
உங்கள் சுவடு பதித்திட

எமதருமை ஐயாவே!

திரு.நாகமுத்து சுசிதரன்
தலைவர் - தர்மகர்த்தா - சின்னத்தம்பி
அறக்கட்டளை நிதியம்,

மல்வில்,
இயக்கச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்வில் கிருஷ்ணன் கோவில் வரலாற்றில்

இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடா நாட்டில் ஆனையிறவுக்கு வடக்கே பச்சிலைப்பள்ளிப் பிரிவுக்குள் இயக்கச்சி கிராமத்தில் மேற்குப் பக்கமாக கண்டிவீதியில் புளியடிச் சந்தியிலிருந்து வடக்கே இரண்டு அரை கிலோமீற்றர் தூரத்தில் மல்வில் என்னும் சிற்றூரிலே காத்தற் கடவுளாம் கண்ணபிரான் பாமா, ருக்குமணி சகிதம் எழுந்தருளி மக்களுக்கெல்லாம் திருவருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார். இங்கு சிவன், அம்மன், பிள்ளையார், முருகன், நாகதம்பிரான், வைரவர் நவக்கிரகங்களும் சேர்ந்தமர்ந்து அருள்பாலித்திருப்பது மிகுந்த சிறப்பம்சமாகும்.

கிழக்கே காவல் தெய்வமான, இலச்சுளான்வைரவரும், வடக்கே திரியாய் அம்மனும், மேற்கே கந்தசாமியாரும் தெற்கே 50 ஏக்கர் விஸ்தீரணமுள்ள தீர்த்தக் குளமும் கொண்ட மத்தியிலே மருதமர விருட்சங்களும், வானுயர்ந்த கற்பக விருட்சமான பனை மரங்களும் தென்னை மரங்களும் மற்றும் பயன் தரு விருட்சங்களுக்கு மத்தியில் கோயில் கொண்டு அமர்ந்திருக்கின்றார். மந்தி இனங்களும் மயில்களும், பருந்துகளும் தாவி விளையாடும் காட்சியும் தெற்குப் பக்கத்தே அமைந்திருக்கும் தீர்த்தக் குளத்திலிருந்து செந்தாமரை, அல்லி, ஒலு, கொட்டி மலர்களின் இயற்கையான வாசனை வீசும் சூழல் கோவிலின் வடபுறத்தே கோவிலுக்கு வரும் வீதியும் தென்னம் தோப்பும் மேலும் அழகு செய்கின்றது.

ஆதியில் இக் கோவிலின் வடக்கே அமைந்துள்ள சங்குகேணி என்னும் இடத்தில் அமைந்திருந்ததாகவும், 16ம், 17ம் நூற்றாண்டு காலத்தில் இலங்கை அந்நியரால் ஆளப்பட்டு வந்ததாகவும், அவர்களது ஆட்சிக்காலத்தில் இந்துக் கோயில்களை அழித்து வந்தாகவும் அதனால் அச்சமடைந்து விக்கிரகங்களை பெரும் பற்றைக் காடுகளில் மரப்பொந்துகளிலும் ஒளித்து மறைத்து வைத்திருந்து பிற்காலத்தில் அவற்றை புனருத்தாரணம் செய்த தாகவும் அக்காலத்தில் குதிரை,யானை,மாட்டுவண்டியைப் பயன் படுத்தியே பயணங்கள், தபால் பரிமாற்றங்கள் நடைபெற்றதாகவும் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதாதையர் அறியப்படுத்தினார்கள். இன்றும் கூட கோயில் அண்மித்த பகுதியில் ஆனைத்தெரு என்ற பெயருடன் தெரு ஒன்று உள்ளது.

எமது பகுதியில் (மல்வில் கிராமத்தில்) வல்லிபுரக் குறிச்சி வடமராட்சி பகுதியிலுள்ளவர்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதற்கு காணி ஆவணமான தோம்பு உறுதிகள் மூலம் அறியக்கிடக்கின்றது. அதனால் தான் கோயில் அறங்காவலர்கள், பூசகர்கள், தர்மகர்த்தாக்கள் அந்தவழி பரம்பரையினர் வழிநடத்தி வருகின்றனர். அதனால் வல்லிபுரக் கோயிலுக்கும் எமது மல்வில் கிருஷ்ணன் கோயிலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இங்கு வீம ஏகாதாசிப்புராணம், வைகுண்ட ஏகாதாசிப்புராணம், பகவத்கீதை, கிருஷ்ணன் தூது தெல்லிப்பளை ஆயர்பாடி என்பவரால் மகாபாரதம், வட்டக்கச்சி சுப்பிரமணியம் என்பவரால் நாலாயிரத் திவ்வியம் போன்ற காவியங்கள் புராணங்கள் படிக்கப்பட்டு உற்சவமாக நடைபெற்று வருகின்றது.

வருடம் தோறும் வரும் ஆவணி மாத பஞ்சமித் திதி தொடக்கம் பூரணை வரையுள்ள பன்னிரு தினங்கள் நாம் அறிகின்ற காலம் தொடக்கம் இன்றுவரை திருவிழா நடைபெற்று வருகிறது. நான்காம் திருவிழா தொடக்கம் வெண்ணெய் திருவிழா, துகில் உரிதல், பாம்புத்திருவிழா மகாகம்சன் போர், வேட்டைதிருவிழா, தேர், சமுத்திர தீர்த்தம் ஆடுவதற்காக புளியடிச்சந்தி, கண்டி வீதி வழியாக புதுக்காட்டுச் சந்தியால் சோறன்பற்று, மாசார் ஊடாக, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை கொடுக்கிளாய் தீர்த்தம் ஆடிய பின் அடியவர்களுக்கெல்லாம் அன்னதானம் வழங்கி ஆழியவளை ஊடாக கொற்றாண்டார், இயக்கச்சி வழியாக தமது இருப்பிடத்தை வந்தடைவார். தீர்த்தமாட செல்லும் வாகன அணியில் செல்லும் அடியவர்களுக்கு அவல், கடலை, சோடா, சர்பத் தேநீர், போன்ற பான வகைகளும் வீதிகளில் வழங்குவர். இக்காட்சிகளைக் காணும் போது மாயவனின் பக்தி பூர்வமான மக்கள் திரள் ஒரு பிரமிக்கத்தக்கதான காட்சி ஆகும்.

1955ம் ஆண்டுக்கு முன் இக் கோயில் நாலாபக்கமும் பற்றைக் காடாகவே காணப்பட்டது. காட்டுப் பாதை ஊடாக மணல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையில் பிதா மாதாவுடன் சென்றிருக்கின்றோம். அக்காலத்தில் முகாவில், மல்வில் சனச்செறிவான ஆதிபரம்பரை வாசிகள் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். புளியடிப்பாதை கூட மண்பாதையாகவே இருந்தது.

எனக்குத் தெரிந்த கோயில் பூசகர் சின்னையா கோயிலிலிருந்து ஒரு கிலோமீற்றருக்கு அப்பால் மல்வில் கிராமத்திலிருந்து தினந்தோறும் பூசைபண்ணித் திரும்புவார். அவரிடமிருந்து சிறு மாட்டுவண்டிச் சில்லின் தடிப்பு ஓரங்குலமளவில் இருக்கும் இவ்வண்டிலைப் பயன்படுத்தி உற்சவ வேளையில் கோயிலுக்குத் தேவையான பூசைப் பொருட்களை ஏற்றிவருவார். இவ் வண்டிலிலே கோவிலுக்கு வேண்டிய கல், சீமெந்து சுண்ணாம்புக்கல், செங்கல் போன்ற இன்னோரன்ன பொருட்களை ஏற்றி இக்கோயிலை கட்டி கும்பாபிஷேகம் செய்து திருவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றது. கோவிலின் முன்பக்கம் சிகரம் அமைத்து வடபகுதியிலே பிரபல்யமான மேளக்கச்சேரி, சதுர்க்கச்சேரி, வில்லுப்பாட்டு நிகழ்வும் மற்றும் நிகழ்ச்சிகளும் அந்தந்த உபயகாரர்களால் நடைபெறச் செய்தவர்.

1980ம் ஆண்டளவில் இக் கோவிலின் மூலஸ்தான பண்டிகையில் வெடிப்பு ஏற்பட்டதன் விளைவாக பாலஸ்தான பிரதிஷ்டை பண்ணி 3ம் மண்டபத்தில் மூலவரை வைத்து பூசைகள் நடைபெற்று வந்தது.

இதற்கிடையில் சின்னையா பூசகர் கோவில் மடப் பள்ளியிலேயே அவரது துணைவியாருடன் தங்கியிருந்து பூசைகளைக் கவனித்து வரும் நாளில் வயது முதிர்ந்து சற்று நோயாளியாக மாறுகின்ற தன்மையில் அவருக்கு பிள்ளைகள் இல்லாத காரணத்தால் அவரது அண்ணன் முறையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகேசுவின் மகன் சின்னத்தம்பி என்பவரை பூசைக்கு அமர்த்தினார். சின்னத்தம்பியின் சகோதரர் மந்துவிலில் இருந்த விஸ்வலிங்கம் அவர்களை தமது பதிலுக்கு நியமித்துக் கொண்டார். காலப் போக்கில் சின்னையா பூசகர் மரணமானபின் நிரந்தரமாக தனது துணைவியாரோடு இங்கேயே குடிகொண்டு வாழ்ந்து வரும் நாளில் எம் மாயவன் திருவருளால் பெருமானின் எதிர்கால நயத்தையும் திருப்பணிச் செயற்பாட்டைக் கருத்தில் கொண்டோ என்னவோ ஓர் ஆண்மகவொன்றைத் திருவருளினார். இவருக்கு செல்லப்பெயராக "கண்ணன்" என்ற மாயவன் பெயரையும் வைத்தனர். இவரது தகப்பனாரான சின்னத்தம்பி அவர்கள் விதிமுறைப்படி பலராலும் பாராட்டத்தக்கவாறு பழகி பக்தி சிரத்தையுடனும், தெய்வ கடாட்சத்துடனும் பூசை பண்ணி வந்தார். பாலஸ்தாபனத்திலிருக்கின்ற எம்பெருமானுக்கு தனது ஆயுள் காலத்தில் ஆகம விதி முறைப்படியான இல்லிடம் ஒன்றை அமைத்து கும்பாபிஷேகப் பெருவிழாவைச் செய்ய எண்ணி பழுதடைந்திருந்த மூலஸ்தானத்தை உடைத்து தமது ஆயுள் காலத்தில் எப்படியாவது கட்டி ஒரு மகா கும்பாபிஷேகத்தை காணவேண்டுமென்று அபிலாசைப்பட்டு நல்லதொரு சுபநாளில் அத்திவார அடிக்கல்லையும் நாட்டி வைத்தார்.

அக்காலத்தில் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழலில் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் இடப்பெயர்வு, பொருளாதாரத் தடைகள் ஏற்படுத்திய காரணத்தினால் எம்பெருமானின் சந்நிதானத்தை விட்டகலவேண்டிய துர்ப்பாக்கியமான சூழ்நிலை ஏற்பட்டது. மக்கள் யாபேரும் திக்குத்திக்காக இடம்பெயர்ந்த வாழ்வில் காணப்பட்டனர். இதனால் அவரது மனதில் ஆணித்தரமாக எண்ணியிருந்த கனவு நிறைவாகாத மனத் தாக்கத்திற்குள்ளான நிலையில் 2008.04.03ம் திகதியன்று சிவபதமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ல் மீண்டும் நடைபெற்ற மீள்குடியமர்வின் பின் இவரது ஏகபுத்திரன் கண்ணனின் அயராத பெருமுயற்சியாலும் மாயவன் திருவருளினாலும் அடியவர்கள் யாபேரினதும் பெருமுயற்சியினாலும் மாயவனுக்கோர் இல்லிடம் சிறப்பாக அமைத்து 03.07.2013ல் மகா கும்பாபிஷேக குடமுழுக்கு திருவருள் கைகூடியது. திரும்பவும் சிறு திருத்த வேலைகள் அவசியமாகச் செய்ய வேண்டிய தேவை இருந்ததால் பாலஸ்தாபனம் செய்து பின் மீளவும் 2018ல் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டு மாயவன் திருவருள் பரிபாலித்துக் கொண்டிருக்கிறார்.

எனவே, மேற்படி கைங்கரியமான திருப்பணிக்கு முதன் முதல் அத்திவாரக்கல் நாட்டி எமக்கு முன்மாதிரியான அத்திபாரத்தை ஆக்க அரும்பாடுபட்ட தமது எண்ணக் கருத்தையும் நிறைவேற வைத்த அறங்காவலரான அமரர் கா.சின்னத்தம்பி பூசகர் அவர்களின் பதின்நான்காவது சிரார்த்த தினத்தை நினைவு கூர்ந்து அவரின் நினைவாக ஞாபகார்த்த நிதியம் ஒன்றை அமைக்க அனைவரும் உறுதியான திட சங்கர்ப்பம் பூணுவோமாக.

**ஆ. இராசரத்தினம்,**
கௌரவ செயலாளர்,"தர்மகர்த்தாசபை"
மல்வில் கிருஷ்ணன் கோவில்,
இயக்கச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயாவின் சேவையைப் பற்றி நான் கண்டதும் பகவத் கீதையில் என் மனதைத் தொட்டதும்

## என்னுரை

முதற்கடவுள் விநாயகரை வணங்கி காத்தல் கடவுள் கண்ணபிரான் ஆசி வேண்டி இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றேன். சைவத்திற்கும் தமிழிற்கும் அளப்பரிய தொண்டாற்றிய ஆறுமுக நாவலர் பெருமானின் 200 ஆவது ஜனனதினத்தை முன்னிட்டு ஆறுமுக நாவலர் ஆண்டாக அரசினால் பிரகடனப்படுத்தியிருக்கும் 2022ம் ஆண்டில் சைவமக்களால் நினைவு கூரப்படும் இந்நாளில் மாயவனுக்கு சேவை செய்யும் பெரும்பேறு பெற்ற சின்னத்தம்பி ஐயாவைப் போற்றி வணங்கி அவரை நினைவு கூர்ந்து சிறு உரையெழுதுவதில் பெரும் உவகையடைகின்றேன்.

என் நினைவுக்கு எட்டியதிலிருந்து பெற்றோருடனும் பேரனாருடனும் உறவினர்களுடனும் ஞாயிற்றுக்கிழமைகளில் மல்வில் கிருஷ்ணர் ஆலயம் செல்வோம். எனது பிறப்பிடம் மாசார் கிராமம். அக்கிராமத்திலிருந்து சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்திலிருக்கும் மல்வில் கிருஷ்ணர் ஆலயத்திற்கு சிறு காட்டுப் பிரதேசத்திற்குள் இருக்கும் ஒற்றையடிப் பாதையால் காலைப்புதைக்கும் சுடுமணல் பிரதேசத்தினால் நடந்து செல்வோம். சிறு நிழல் வந்தால் களைப்பாறி கோயிலை வந்தடைவோம். எல்லோரும் குளத்தில் நீராடி ஈர உடைகளை காயவிட்டு கோயிலுக்குள் சென்று வழிபடுவோம். அத்துடன் நாகதம்பிரானுக்கு பொங்கல் நேர்த்திகள் செய்து வழிபடுவோம். தற்போது குளத்தில் நீராடும் கலாசாரங்கள் மற்றும் கால்நடையாக மணலில் நடப்பது போன்ற ஆன்மீகக் கலாசாரங்கள் இன்று காணாமல் போய்விட்டது.

பூசகர் ஐயா தனது மனைவி இரத்தினம் அம்மாவுடன் இணைந்து இறைவனுக்கு நெய்வேத்தியம் வைத்து அடியவர் களுக்கும் கொடுப்பது வழக்கம். பூசகர் ஐயா வெண்கலச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சருவக்குடத்தின் கழுத்தில் சுருக்குத்தடம் இட்டு தீர்த்தக்கிணற்றில் நீர் அள்ளி மூலமூர்த்திக்கும் ஏனைய விக்கிரகங்களுக்கும் அபிஷேகம் செய்வார். ஒவ்வொரு தடவையும் தண்ணீர் அள்ளி ஊற்றும்போது கயிற்றை கழற்றி வைத்துவிட்டு மீண்டும் கயிற்றை கட்டி தண்ணீர் அள்ளுவார். சுவாமிக்கு பூ போடும்போது ஒவ்வொரு பூவாகப் பார்த்து போடுவார். பூவிதழ் ஒடிந்து அல்லது சேதமடைந்திருந்தால் வெளியே போட்டுவிடுவார். அடியவர்கள் மனம் நொந்து அர்ச்சனை செய்து வழிபடுவதை உணர்ந்து சிறிது நேரம் யோசித்துவிட்டு அவரவர் பலன்படி கிருஷ்ணரின் உணர்வில் பலன் சொல்லி ஆறுதலும் ஆசியும் வழங்குவார்.

ஐயா உருவத்தில் சிறியவராயினும் உடல்வலிமையும் மனவலிமையும் உடையவர். யுத்த காலத்தில் இயக்கச்சி ஆனையிறவு தளங்களில் உக்கிர சண்டை நடந்தபோது அவர் எவ்வித பதட்டமும் இல்லாமல் நிதானமாகவும் அவதானமாகவும் தனது கடமைகளைச் செய்வார்.

பூவுலகில் பிறப்பவர்கள் இறப்பதென்பது நியதி. அதற்கும் காலமும் நேரமும் வரவேண்டும் என்பார்கள். பல்வேறு தடைகளின் பின்பும் அவரை இன்று நினைவுகூர்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததற்காக மல்வில் கிருஷ்ணருக்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்து பிரார்த்திப்போமாக.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் நான் கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றியிருந்த காலத்தில் "நிதா கோகுலம்" என்னும் அமைப்பு ஆதரவற்ற சிறுவர்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கான ஒரு கட்டடம் கட்டி திறப்பு விழாவுக்கு என்னை விருந்தினராக அழைத்திருந்தனர். அதனால் ஏற்பட்ட உறவு காரணமாக நிதா கோகுல அமைப்பின் தலைவி நந்தராணி தேவி அம்மையார் பகவத்கீதை உண்மையுருவில் எனும் புத்தகத்தை எனக்கு அன்பளிப்புச் செய்தார். ஒவ்வொரு மனிதனும் தனது மத அடிப்படையில் உச்ச ஆன்மீக அனுகூலங்களை பெறுவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தந்த மதங்கள் சமயம் சார்ந்த நூல்களை வெளியிட்டனர். அந்த வகையில் இந்துக்களுக்கு பகவத்கீதையும் கிறிஸ்தவர்களுக்கு பைபிள் பௌத்தர்களுக்கு திரிபீடகமும் முஸ்லீம்களுக்கு திருக்குர்ரானுமாக புனிதநூல்களாகக் கருதப்படுகின்றது.

பகவத்கீதையில் நான்படித்தவற்றில் எனது மனதில் நின்ற கருத்துக்கள் சிலவற்றை குறிப்பிடுகின்றேன்.

ஹரே கிருஷ்ணா, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, ஹரே எனும் உச்சாடனமே ஒருவன் தனது வாழ்வின் இறுதியில் தனது நிலையை வெற்றிகரமாக மாற்றிக் கொள்வதற்கான மிகச்சிறந்த வழியாகும்.

மனிதனின் ஆத்மா ஒருபோதும் அழிவதில்லை. கிடைத்த மனிதப்பிறவியில் ஆன்மீக ஈடேற்றத்திற்கு பகவத்கீதை உரிய வழிகாட்டுகின்றது.

கடமையைச் செய்துகொண்டே பகவானை நினைக்கலாம். அர்ச்சுனனை போரை நிறுத்தி தன்னை நினைக்கும்படி கிருஷ்ணர் சொல்லவில்லை.

தனக்கு தீங்கு இழைப்பவனைக்கூட பகவான் மன்னிப்பார் தனது பக்தனுக்கு தீங்கிளைப்பவனை பகவான் மன்னிக்கமாட்டார்.

வேதவிதிகளின்படி ஆறுவகையினரை கொல்வதால் பாவம் இல்லை.

விசம் கொடுப்பவர்
வீட்டுக்கு தீ மூட்டுபவர்
பயங்கர ஆயுதத்தால் தாக்குபவர்
செல்வத்தை கொள்ளையடிப்பவர்
பிறர் நிலத்தை ஆக்கிரமிப்பவர்
பிறர் மனைவியை கடத்திச் செல்பவர்
என கூறப்பட்டுள்ளது.

பகவத் கீதையின் சாராம்சம் சகல உயிர்வாழிகளுக்கும் முற்பிறப்பின் கர்மவினைகளை நீக்குவதற்கு அவரது திவ்ய விக்கிரக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவத்தை பெறுபேறான பரமபதத்தை அடைவதாகும். நீர் எங்கு நிறைந்திருந்தாலும் நன்னீர் உள்ள இடத்தில் தான் உயிர்கள் வாழமுடியும். அதேபோல் கிருஷ்ணரது பிரவாகம் எங்கும் நிறைந்திருந்தாலும் ஆலயத்தில் வீற்றிருந்து அருட்கடாட்சம் வழங்கும் மல்வில் கிருஷ்ணன் எமது பிரதேசத்தில் அமைந்திருப்பது எமது பெரும் பேறாகும்.

இந்நூலை வெளியிடுவதற்கு ஊக்கமளித்த ஆலயத்தின் அறநெறிசமூக அபிவிருத்திச்சபை ஆலோசகர் திரு.அ.கேதீஸ்வரன் அவர்களுக்கும் ஆலயதர்மகர்த்தா சபைத் தலைவர் திரு.சி.கமலரூபன் அவர்களுக்கும் பொருளாதார நெருக்கடியான காலத்திலும் இம் மலர் வெளியிட உறுதுணையாக இருந்த திருமதி.பா.கமலம்மா அவர்களுக்கும் நூலுக்கு மிகக்குறுகிய காலத்திற்குள் ஆக்கங்களை சமர்ப்பித்த பெரியோர்களுக்கும் மின்னஞ்சல் மூலம் தகவல்களையும் வாழ்த்துரைகளையும் பெற்றுத் தந்த பொறியியலாளர் சன்ஜீவன் அவர்களுக்கும் இந்நூலை அச்சிட்டு தந்த திருக்கணித பதிப்பகத்தினருக்கும் எனது பணிவன்புகலந்த நன்றிகள் உரித்தாகுக.

**திருமதி.குணரஞ்சிதம் பிரதாபராஜன்**
இதழாசிரியர், செயலாளர்
தர்மகர்த்தா சின்னத்தம்பி அறக்கட்டளை
ஓய்வு நிலை கிராம அலுவலர்
மாசார்,
பளை.

03.04.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை துணை

# ஸ்ரீ சுதர்ஸண வழிபாட்டு மகிமை

பாற்கடலில் ஆதிசேஷன் என்னும் ஆயிரம் தலைப்பாம்பின் நிழலில் அரிதுயில் கொள்ளுபவர் எம் பெருமானாகிய பகவான் ஸ்ரீஹரி விஷ்ணு அவர்களுடைய கைகளில் ஒன்றில் ஏந்தியுள்ள ஆயுதம் தான் சுதர்சனம். இந்த சுதர்சனம் எனப்படுபவர் விஷ்ணுவின் கையில் உள்ள திருச்சக்கராயுதமாவார் ஆகையினால் இவர் பெயர் சக்கரத்தாழ்வார் என்று ஆயிற்று.

இந்த சக்கரத்தாழ்வாரின் வல்லமையை அந்த ஆயிரம் தலை படைத்த ஆதிசேஷனாலேயே சொல்ல முடியாது இந்த சக்கராயுதம் எப்போதும் இறைவனை விட்டு பிரியாமல் இருக்கக் கூடிய ஓர் ஆயுதம் ஆகையினால் இது அளவற்ற சக்திகளைக் கொண்டதாக விளங்குகின்றது. பகவானாகிய ஸ்ரீஹரி விஷ்ணு வானவர் எப்போதெல்லாம் இந்த சக்கராயுதமும் ஓர் அவதார புருஷராகப் பிறவியை எடுக்கின்றது.

இறைவனை விட்டு நீங்காது இருக்கக்கூடிய இவர் ஸ்ரீராமவதாரம் எடுக்கும் வேளையில் பரதனாகப் பிறவி எடுக்கின்றார். அதாவது மஹாவிஷ்ணு ஸ்ரீராமராகவும் அவரைக் காக்கக்கூடிய அவரைவிட்டுப் பிரியாத ஆதிசேஷன் லஷ்மணனாகவும் சக்கராயுதமாகிய சுதர்ஸனர் என்ற பெயருள்ள இவர் பரதனாகவும் இவர் கையில் உள்ள பாஞ்ச ஜன்யம் என்ற சங்கானது சத்துருக்கனாகவும் பிறவியினை எடுக்கின்றனர் என்பதும் ஸ்ரீராமயணம் கூறும் கருத்தாகும்.

ஸ்ரீராமராகப் பிறவி எடுத்து துத்ரேதாயுதத்தில் இதே மஹா விஷ்ணு துவாபரயுகத்தில் பிறவியை எடுக்கும்போது ஸ்ரீ கிருஷ்ணர் என்று பெயர் பெறுகின்றார். அப்போது அவர் மனிதர் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையை மீறித்தானே இறைவன் என்று பல சமயங்களில் நிருபிக்கக்கூடிய வேளையில் சாட்சியாக வருவது இந்த சக்கராயுதமான சுதர்ஸனர் ஆவார்.

சுதர்ஸன வழிபாடானது இன்று மிகவும் பிரசித்தி பெற்றுவருகின்றது. எம்மை எல்லாம் காத்தருளும் கடவுளாகிய விஷ்ணுவின் வலது கையில் எப்போதும் சுழன்று கொண்டிருப்பவர் இவர் தர்ம தேவதையின் வடிவம் ஆவார். அதர்மத்தை அழித்து தீமைகளை விலக்கி சங்கடங்களைத் தீர்க்கும் அற்புதம் நிறைந்தவர். வைணவர்களால் மட்டுமன்றி இந்து சமயப் பிரிவினர் எல்லோராலும் வழிபாடு செய்யப்படுகின்ற சிறப்பிற்குரியவர்.

முன்னோர் சமயம் பிரம்ம தேவரது சிரசை பரமசிவன் வைரவர் வடிவம் எடுத்து உச்சந் தலையைக் கொய்து அவனது ஆணவத்தை அடக்கினார். இதனால் உண்டான தோசத்தை நிவர்த்திக்க பரமசிவன் திருமாலை வேண்டினார். அந்த நேரத்தில் திருமால் பரமசிவனுக்கு பத்திரிகாசிரமத்தில் சுதர்ஷன வழிபாட்டைப் பற்றி எடுத்துக் கூறி சுதர்ஸனரை வழிபடும்படி அருள அதன்படி சிவனும் கைலாயத்தில் முறைப்படி சுதர்ஸனரை வழிபட்டதால் பிரமதேவரின் சிரசைக் கொய்ததினால் ஏற்பட்ட பாதகங்கள் நிவர்த்தி ஆயின. இதன்பின் தேவர்களின் தலைவரான இந்திரன் முதலான சகல தேவர்களும் பரமசிவனிடமிருந்து சுதர்ஸன வழிபாட்டை அறிந்து சுதர்ஸனரை வழிபட்டு திருவருளைப் பெற்றார்கள். எனவே சுதர்ஸனரை முறையோடும் நெயியோடும் வழிபடுகின்றவர்கள் உடல் நலமும் நீங்காத செல்வமும் குறையாத ஆயுளும் சகல ஐஸ்வரியங்களும் மங்காப் புகழ் மற்றும் அனைத்து நலன்களும் பெற்றுக் கொள்வார்கள் இதனை "சுதர்ஸன சபதம்" என்ற நூல் விபரிக்கிறது.

ஸ்ரீ சுதர்ஸனர் என்பதன் பொருள் நல்வழிகாட்டுபவர் என்பதாகும். இவருடைய சம்பந்தம் பெற்றவர்களே பகவானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவார்கள் எனக் கூறப்படுகின்றது. ஸ்ரீ சுதர்ஸனர் இரணியாட்சனை அழித்தவராக அவதாரத்தின் சக்தியையும் பக்த பிரகலாதனுக்காக இரணியனின் மார்பைப் பிளந்த நரசிம்ம அவதாரத்தின் சக்தியையும் ஒருங்கே பெற்றவராவார். சுதர்ஸனனின் முன் பக்கத்திலே நரசிம்ம மூர்த்தியும் சுதர்ஸனனின் பின் பக்கத்திலே வராக மூர்த்தியும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. வராக மூர்த்தி ஞானஸ்வரூபி ஆவார். இதனால் ஸ்ரீ சுதர்ஸனர் ஞானம் அளிப்பதில் வல்லவர். மக்களின் மனதை ஈர்க்கும் சொற்றிறனும் வேதாந்த விவேக ஞானம் அளிக்கும் ஒருவரை சக்கரவர்த்தி ஆக்க வல்லவர். ஸ்ரீ சுதர்ஸனர் அழிக்க முடியாத பகைமையை அழித்து நீக்க முடியாத பயத்தையும் நீக்கவல்லவர். அவர் நமது உட்பகை வெளிப்பகையை அழிக்கவல்லவர். நோய்களைத் தீர்க்கின்றார். கல்வியும் செல்வமும் அளிப்பவர் பகவான் நினைக்கும் பணியைச் செய்து முடிப்பவர் எனவே ஸ்ரீ சுதர்ஸனர் எல்லாவற்றையும் தரும் கற்பகமரமாகும்.

சுதர்ஸனர் மஹாவிஷ்ணுவின் அம்சம் என்று சிலபரத்தினம் எனும் நூல் கூறுகிறது. இவரின் மறுபெயர்களாக சகிதரம், சுதர்ஸனம், நேமிதிகிரி ரதாங்கம், சுதர்ஸனாழ்வார், திருவாழியாழ்வார், என்பன விளங்குகின்றன. ஸ்ரீமத் நாராயணர் தான் நினைத்தவாறே எதையும் செய்யும் ஆற்றல் பெற்றவர். காரணம் ஸ்ரீ சுதர்ஸனரை தனது திருக்கரத்தில் ஏந்தியிருப்பதனாலேயே என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இச் சுதர்ஸனரின் பெருமையை எம்பெருமானே பூரணமாக அறியவல்லவர் ஆவார்.

சுதர்ஸனரை மஹாவிஷ்ணுவாகக் கருதி வழிபடுவது எமது மரபாகும். அதேவேளை சிவமாகவும், சூரிய வழிபாடு, நாகவழிபாடு, சக்திவழிபாடு என்பன இதற்குள்ளே சங்கமமாவதைக் காணலாம். எனவே சுதர்ஸனரை வழிபடும்போது எல்லாத் தெய்வங்களையும் வழிபட்ட பேரருள் கிடைக்கின்றது. நவக்கிரக தோஷம், நாகதோஷம், சர்ப்ப தோஷம், பிதிர் தோஷம் என்பன நீங்குவதையும் அனுபவத்தினூடாகக் காணலாம். அதனுள் உள்ள பிரணவம் விநாயகரையும் சட்கோவை சண்முகரையும் கூட குறித்து நிற்கின்றது. எனவே சுதர்ஸனரை வழிபடும்போது அவர்களின் திருவருளும் கிடைக்கின்றது. சுதர்ஸனரை மூன்று நிலைகளில் வைத்து வழிபடுவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. எண்கரங்கள் கொண்ட சுதர்ஸனர்
2. பதினாறு கரங்கள் கொண்ட சுதர்ஸனர்
3. முப்பத்திரண்டு கரங்கள் கொண்ட சுதர்ஸனர்

இவற்றில் சாதாரணமாக எட்டு அல்லது பதினாறு கரங்களுடன் வீறு கொண்டெழும் தோற்றத்துடன் அறுகோணச் சக்கரத்தில் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தையே பெரிதும் பிரதிஷ்டை செய்து வழிபடுகின்றனர். ஷட்கோண சக்கரம் என்னும் ஆறு கோணத்தின் மத்தியில் உக்கிரவடிவ சுதர்ஸனரும் திரிகோண சக்கரம் என்னும் முக்கோணத்தில் யோக நரசிம்மரும் அருள் பாலிக்கின்றனர். எனவே சக்கரத்தில் உள்ள முக்கோணம் சக்தி அம்சத்தையும் யோக சக்தியையும் அள்ளி வழங்கவல்லது.

திருமால் பாஞ்சாயுததாரியாவார் அவர் விசேடமாக ஐந்து ஆயுதங்களைத் தரித்திருகிறார் அவையாவன சங்கு, சக்கரம், கதை, கத்தி, வில் என்பவையாகும். இவ் ஐந்து ஆயுதங்களும் நித்திய ஆவிகள் என்னும் இவர்கள் சிறிது நேரமும் பகவானை விட்டு பிரியாமல் இருக்கின்றனர். இவ்வாறு விஷ்ணுவுக்கு ஐந்து ஆயுதங்கள் இருக்கின்ற வேளை ஸ்ரீ சுதர்ஸன வழிபாடு 16 ஆயுதங்கள் இருக்கின்ற சிறப்பைக் காணலாம். வலது கைகளிலே சக்கரம், ஈட்டி, கத்தி, கோடாரி, சதமுகாக்தினி, மாவட்டி, தண்டம், சக்தி என்னும் 8 ஆயுதங்களை ஏந்தியுள்ளார். இடது கைகளிலே சங்கு, வில், கண்ணி, கலப்பை, உலக்கை, கதை, வஜ்சம், சூலம் என்னும் 8 ஆயுதங்களையும் ஏந்தியுள்ளார்.

உலகத்தின் பரம பதியான சிவபெருமானே சக்கராயுதத்தை மகாவிஷ்ணு மூர்த்திக்கு கொடுத்தமை பெரும் சிறப்பிற்குரியது. முன்னொரு காலத்திலே நாராயணப் பெருமான் பூமிக்கு வந்து சிவலிங்கப் பெருமானை எழுந்தருளச் செய்து சிவபூசை செய்து வந்தார். அவர் அதன்போது ஒரு விரதத்தைக் கைக்கொண்டார். ஒவ்வொரு நாளும் 1000 தாமரை மலர்களால் அர்ச்சிப்பது என்பதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவாகும். அதன்படி பல நாட்கள் பூசை செய்து வரும்போது இறைவன் அவரது பக்தியைச் சோதிக்கும் முகமாக ஒரு நாள் ஒரு மலர் எங்கு தேடியும் கிடைக்காது செய்தார். 999 மலர்கள் மட்டுமே கிடைத்தன. முறைப்படி தமது பூசையை நிறைவு செய்ய முடியவில்லையே என கவலைப்பட்டார். பின்பு தனது கண்களையே தோண்டி தாமரை மலராக அர்ப்பணித்தார். சிவலிங்கப் பெருமான் அவரது பக்திக்கு இரங்கி காட்சி கொடுத்து மிகவும் சக்திவாய்ந்த சக்கராயுதத்தை நாராயணருக்குக் கொடுத்தார். சிவபூசையின் மகிமையும் உலகத்திற்கு வெளிப்படுத்தப்பட்டது. இதனையே சேந்தனாரும் தமது திருப்பல்லாண்டிலே "மாலுக்குச் சக்கரம் மன்றருள்செய்த" எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே சுதர்ஸன வழிபாடு சிவ வழிபாடாகவும் அமைகின்றது.

தர்மர் ராஜசூய யாகம் ஒன்று செய்கிறார் அப்போது அந்த யாகத்தின் தலைவராக பகவான் ஸ்ரீ கிருஷ்ணரையே தேர்ந்தெடுக்கின்றார். தர்மர் இதை பொறுக்க முடியாமல் சேதி நாட்டு மன்னனான சிசுபாலனால் இத்தணைக்கும் அவன் கிருஷ்ணருக்கு உறவினன் சிசுபாலன் பிறக்கும் போதே அவன் கிருஷ்ணரால் கொல்லப்படுவான் என்ற உண்மையை அறிந்திருக்கும் அவன் தாய் அவன் என்ன பிழை செய்தாலும் அதை பொறுத்தருளும்படி வேண்டுகிறான். கிருஷ்ணரிடம் பகவான் கிருஷ்ணர் இதற்குச் சம்மதிக்கின்றார். ஆனால் பகவானை அவமதிக்கும் ஒருவனை தன்னால் மன்னிக்க முடியாது என்று கூறுகிறார். சுதர்ஸனர் ஆகவே அவர் வேண்டுகோட்படி நூறு பிழை செய்யும்வரை பொறுப்பேன் என்று பகவானையே சொல்லவைக்கிறார் சுதர்ஸனர். சிசுபாலனின் தாயும் சம்மதிக்கிறார். ஆனால் நிகழ்ந்தது வேறுவிதமாயிற்று ராஜசூய யாகத்தின்போது ஸ்ரீகிருஷ்ணரை அவமதிக்கின்றான் சிசுபாலன் - கண்ணன் பொறுமையுடன் புன்முறுவல் பூத்து இருக்கும்போது நூறு பிழை செய்து முடிந்து நூற்று ஒன்றாவது பிழையைச் சிசுபாலன் செய்தபோது பொங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகிறார் சுதர்ஸனர். ஸ்ரீகிருஷ்ணரின் உத்தரவை எதிர்பாராமல் அவன் தலையைக் கொய்து திரும்புகிறார். அப்படிப்பட்ட மகா உன்னதமானவர் ஸ்ரீ சுதர்ஸனர் ஆவார்.

ஸ்ரீ சுதர்ஸனர் காலத்துக்குகாலம் பல அடியவர்கள் காத்திருக்கின்றார். அப்படிப்பட்ட சுதர்ஸனரை நாமும் முறைப்படி திரிகரண சுத்தியோடு வழிபட்டு வாழ்வில் வரும் இடர்களை வெற்றிகொண்டு ஸ்ரீசுதர்ஸனரின் பேரருளால் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக?

சுபம்

"சிவநெறிச் செல்வர் சிவஞானப் பிரியன்"
மிருசுவிலூர் இளஞ் சைவப்புலவர்
**கமலநாதன் கயிலைவாசன் B.A (Hons), M.A**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொல்லியல் திணைக்களம்,
யாழ்ப்பாணம்
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்வில் மாயவன்

பூ மலிந்த கண்ணன் திருக்கோவில்
தாமரைக் குளக்கரையில் - கோவில்
கண்ணன் அருள் மழையில் மூழ்க
பண்ணிய பாவங்கள் பறந்துவிடும்

வேண்டும் வரமது தந்து வினைபோக்கும்
பாண்டவரின் தோழன் பரந்தாமன் - கொண்ட வடம்
மல்வின் திறந்தலந் மாயவனைக் கும்பிட்டால்
வல்வினைகள் யாவும் பறந்திடுமே

மிக்க பழங்குடிகள் வாழ்ந்த ஊர்
இயக்கச்சி மல்வில் குளங்தோறும் - பூக்கள்....
வா வென்று அழைத்து வரம் தருவார்
நோய் தீர்க்க செம்மருந்தாய்

மந்திவிளையாட மானினங்கள் கும்பிடவே
முந்தி இருந்த காட்டோர மல்வில் - பிந்தி
கண்ணன் திருத்தலத்தின் மாயவன் அற்புதத்தால்
பண்ணைக் குடியிருப்பை பார்

பாவங்கள் தீர பழவினைகள் போக்கிடவே
தாமரைக் கண்ணன் தடம்தொட்டான் - மாயவன்
வீற்றிருக்கும் மல்வில் திருத்தலத்தில் காலூன்ற
பற்றிய வினைகள் பறந்தோடிடும்.

அன்பன்
வன்னி முருகேசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா
யாழ்பல்கலைக்கழகம்

## ஆய்வறிமுகம்

இலங்கைத்தமிழரின் பண்பாட்டு வரலாறானது அவர்கள் வாழ்ந்த அல்லது வாழ்ந்து கொண்டிருக்கும் பண்பாட்டுக் கிராமங்களின் ஒருமித்த இருப்பினை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட வேண்டும் என்பது மிகத்தெளிவான ஒரு விடயமாகும். வரலாற்றுக் காலத்தில் இருந்து இலங்கைத்தமிழர் வாழ்ந்து வந்த பண்பாட்டுக் கிராமங்களுள் பல இன்று அழிந்தும் மறைந்தும் விட்டன. இருப்பனவற்றுள் ஒரு சில பல்வேறு காரணங்களினால் அடையாளமே தெரியாதளவிற்கு உருமாற்றப்பட்டுள்ளன. இலங்கைத்தீவில் கடந்தகாலங்களில் ஏற்பட்ட உள்நாட்டு இடப்பெயர்வுகள் காரணமாக பண்பாட்டுக் கிராமங்கள் பல நிரந்தரமாகவே கைவிடப்பட்டுமிருந்தன. கிழக்கு மாகாணத்தில் காணப்பட்ட தமிழ் மக்களது பண்பாட்டுக் கிராமங்கள் பல காணாமலே போயுள்ளன. கந்தளாய் ,பதவியா, கோமரங்கடவை போன்ற மத்திய வரலாற்றுக் காலதமிழ்ப் பண்பாட்டுடனும் இந்துசமயத்துடனும் தொடர்புபட்ட பண்பாட்டுக் கிராமங்களே இந்துப் பண்பாட்டு வரலாற்றிலிருந்து மறைந்து போன கிராமங்களாகும்.

## பண்பாட்டுத் தொன்மமும் இயக்கச்சியும்

ஒருநாட்டிற்கு கிடைக்கக் கூடியதான பண்பாட்டுச் சின்னங்களே பண்பாட்டுத் தொன்மங்களின் விளக்கத்திற்குரிய சிறந்தசாதனமாகக் கருதப்படுகின்றது .பண்பாட்டுவிழுமியங்களை, மரபுகளை விளக்குவதற்கு அப்பண்பாட்டு அடையாளங்களைத் தேடிக் கண்டறிந்து, பாதுகாக்க வேண்டியது இன்றியமையாத தாகின்றது. இந்தத் தேடிக் கண்டுபிடித்தலுக்கே ஆய்வியல் முறைகள் அறிவுபூர்வமானவையாய் வேண்டப்படுகின்றன. இடப்பெயர்களோடு தொடர்புபடுத்தி பண்பாட்டைவிளக்கும் ஆய்வியல் முறைகளின் பின்னணியிலும் வரலாற்று இலக்கியங்கள் பற்றிய பரந்த அறிவுப்புலத்தின் பின்னணியிலும் குறிப்பிட்டவொரு பிரதேசத்தின் அல்லது கிராமத்தின் பண்பாட்டு விழுமியங்களை ஆராய்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டாய்வில் இன்றியமையாதது. அத்துடன் மறைந்து போன ஒரு சமூகத்தின் பண்பாடு என்பதனால் கருதப்படுவது என்ன என்பதை விளக்க வேண்டியதும் அவசியமாகிறது. பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் **தமிழ்ச் சமூகமும்,பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும்** என்றதன் நூலிலே, *"பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒருமக்கட் கூட்டம் தனதுசமூக - வரலாற்றுவளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக் கொண்டபௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்த கருத்துக்கள், மதநடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றினதும் தொகுதியாகும். ஒரு கூட்டத்தின் தொழில்நுட்பவளர்ச்சி, உற்பத்திமுறைமை, உற்பத்திஉறவுகள் கல்விஞ்ஞானம், இலக்கியம் கலைகள் நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும். பண்பாடென்பதுமனிதசமூகத்தின் குறியீட்டுஅம்சங்கள் பற்றியதும் அச்சமூகம் கற்றறிந்து கொள்ளும் அம்சங்கள் பற்றியதுமாகும்"* என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒருபண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும் செயல்களுக்கும் நடத்தை முறைக்கும் (Behavior Patterns) எவை அவசியமென்று கருதப்படுகிறதோ அவையே அப்பண்பாட்டின் விழுமியங்கள் (Values) ஆகும் என அவர் மிகத் தெளிவாக விளக்கியுள்ளமையை இங்கு குறிப்பிடல் வேண்டும்.

## புராதனஆலயங்களும் பண்பாட்டுத் தொன்மங்களும்

இப்பண்பாட்டு விழுமியங்கள் மரபுகளை வெளிப்படுத்தி நிற்பவையான பண்பாட்டுச் சின்னங்கள் போன்றவற்றைத் தேடிக் கண்டறிந்து பாதுகாத்து தம் பண்பாட்டுத் தொன்மையின் மூலாதாரமாக அவற்றைப் பயன்படுத்துவதற்கு வழிகாட்டியாக அமையும் ஆய்வியல் முறைகளின் பின்னணியில் **இயக்கச்சியின் பண்பாட்டுச் சூழமைவினை** நோக்குதல் அவசியமானது. இயக்கச்சிப் பிரதேசத்தின் சூழமைவானது வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியிருப்புக்களைக் கொண்டு உருவானதாக பொதுவாகக் கருதப்படுகின்றது. இலங்கையின் வரலாற்றினைக் குறிப்பிடும் பாளிமொழி நூலான மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலப்பெண்ணான குவேனி பற்றிய ஐதீகத்திற்கும் இயக்கச்சிக்கு மிடையே தொடர்புகள் இருப்பதாக பொதுவாகக் கருதப்படுகின்றது. இதேபோன்று இயக்கர், நாகர் வம்சத்தினர் வாழ்ந்த ஒரு பிராந்தியமாகவும் இயக்கச்சியின் சூழமைவினைக் கொள்ள முடிகின்றது. வடமராட்சி கிழக்குப் பரப்பிலிருந்து குறிப்பாக நாகர்கோவில் நிலப்பரப்பிலிருந்து சுண்டிக்குளம் ஈறாகவும் பின்னர் வண்ணான்குளம், போக்கறுப்பு, முள்ளியான் , இயக்கச்சி வரைக்கும் உள்ள நிலப்பரப்பானது வரலாற்று காலதொல்பொருட்கள் நிறைந்த, தொன்மையான பண்பாட்டுக் குடியிருப்புக்களுடன் கூடிய பல கிராமங்களைக் கொண்ட பிராந்தியமாகக் கணிக்கப்பட்டுள்ளது. இச்சூழமைவானது பின்னர் கி.பி.15ஆம் 16ஆம் நூற்றாண்டு களிலிருந்து போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலங்களில் ஐரோப்பியபண்பாட்டுச் சூழமைவிற்குள் கொண்டு வரப்பட்டமை யினைக் காண்கின்றோம். இந்த இரண்டுகாலப்பரப்புச் சூழமைவுக்கு மத்தியில் மத்தியகாலத்தில் குறிப்பாக கி.பி. 10ஆம் 14ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியப் பண்பாட்டமைவின் சூழலின் கீழ் இப்பிராந்தியம் பண்பாட்டடிப்படையில் எழுச்சி பெற்றிருந்தது என்பதனை இங்கிருந்து கிடைக்கின்ற தொல்லியல் எச்சங்கள் ஆதாரங்களாகின்றன. இயக்கச்சியில் அமைந்தமல்வில் கிருஷ்ணன் ஆலயமும் அவ்வாலயத்தின் பின்னணி நிலமும் மத்திய காலகோயிற் பண்பாட்டின் வளர்ச்சி நிலையினை உறுத்திப்படுத்தும் தளமாக விளங்குவதனைப் பார்க்கின்றோம்.

கிருஷ்ணன் கோயில் பற்றிய ஐதீகங்கள் மல்வில் என்ற பதம் (மாவில் - பெரியமாவில்) வட இலங்கையில் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன. வட்டக்கச்சியிலுள்ள கிருஷ்ணன் கோவிலும் இதே பெயராலேயே அழைக்கப்படுகின்றது. இராமன்வில் என்பதில் உள்ள இரா கெட்டுமன்வில் ஆகிப் பின் மல்வில் என வழங்கியிருக்க முடியும். இராவணவதத்தின் பின் இராமன் திரும்பி வந்த பாதையின் முக்கியமையங்களில் நாண் ஏற்றிநீரை வெளியே எடுத்தமையின் காரணத்தினால் வில்லூன்றி, மல்வில் என இடப்பெயர்கள் உருவானதாகக் குறிப்பிடுவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதுள்ள நிலையில் இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவில் சுற்றாடலில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தொல்பொருட் சான்றுகள் இப்பிராந்தியத்தின் சமயவரலாற்றுத் தலங்களின் தொன்மத்தினை பல நூற்றாண்டுகள் பின்னோக்கிக் கொண்டு செல்வதினை உறுதிப்படுத்தியுள்ளன. முருகைக் கல்லினாலான (coral stone) இந்துசிற்பங்களின் அழிபாடுகள் பல கிருஷ்ணன் கோவிலுடன் தொடர்புபட்ட இப்பரந்த சுற்றாடல் பரப்பில் சிதறிக் காணப்படுகின்றன.செங்கல் பாவப்பட்ட புராதன கட்டிடங்களின் தளங்கள் இக்கோயிற் சுற்றாடலின் பலமுனையங்களில் காணப்படுகின்றன. அவை புராதனசிவன் கோவில் ஒன்றின் அழிபாடுகள் என அவ்வூர் ஐதீகங்கள் தெரிவிக்கின்றன. மிகப்பிரமாண்டமான கோவிற்குளம் ஒன்று இவ்வாலயச் சுற்றாடலில் காணப்படுவது ஒருகாலகட்டத்தில் மல்வில் கிருஷ்ணன் கோவில் அல்லது அதற்கும் முற்பட்ட சிவன்கோவில் பெரியகோயில் வளாகமாக இருந்திருக்கவேண்டும் என்பதனை பறைசாற்றி நிற்பதனைக் காண்கின்றோம்.

பலநூற்றாண்டுகள் பழமை வாய்ந்த முருகைக் கல்லினாலான பலிபீடம்



காவல் தெய்வம் ஒன்றின் தலைப்பகுதி. (கருங்கல்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு காணப்படும் படங்களில் காட்டப்பட்டுள்ள சிற்பங்களை நோக்கும்போது மிகத் தொன்மைவாய்ந்த கோயில் ஒன்றின் எச்சமாக அவைகாணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. மிகப்பழமை வாய்ந்த நாகலிங்கங்களும் இக்கோயில் சுற்றாடலில் காணப்படுகின்றன. மிகப்பிரமாண்டமான தொன்மம் இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயத்துடன் தொடர்பில் இருப்பதனை இக்குறிப்பிட்ட சிற்பங்கள் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாகம் மகிஷாசுரமர்த்தினி என அடையாளம் காணப்பட்ட உருவமானது கடற்பவளக் கல்லினால் செய்யப்பட்டிருப்பது என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. வட இலங்கையில் பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய மையங்களிலேதான் கடற்பவளக் கல்லினாலான கட்டிட உறுப்புக்கள், சிற்பங்கள் செய்யப்பட்டுள்ள மரபினைக் காணமுடியும். இதன்பின்னர் மத்தியகாலத்தின் முடிவில் போத்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களிலேதான் கடற்பவளக் கல்லினாலான கோட்டை–கொத்தளங்களை அமைத்த மரபினைக் காண்கின்றோம். யாழ்ப்பாணக்குடா நாட்டினுள் கந்தரோடையிலிருந்து கடற்பவளக் கல்லினால் செய்யப்பட்ட நிற்கின்ற நிலைக்குரிய கணபதி புடைப்புச்சிற்பம் கிடைத்திருப்பது பெருங்கற்பண்பாட்டின் வாழ்வியல் வெளிப்பாடாக கி.மு.8ஆம்,7ஆம் நூற்றாண்டுகளுக் குரிய சான்றாக அதனைக் கொள்ளமுடிகின்றது.

மகிஸாசுரமர்த்தினியின் சிற்பம் (முருகைக் கல்). விஜய நகரநாயக்கர் காலகலைப் பாணியுடன் காணப்படும் இச்சிற்பம் கபாலமாலையை இடையாபரணமாகக் கொண்டுள்ளமையை காணமுடிகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகைக்கல்லினாலான சிங்கவாகனம். நிற்கின்ற நிலையில் உள்ளது. இது மகிஸாசுரமர்த்தினியின் வாகனமாக உள்ளது.



கந்தரோடையிற் கிடைத்த முருகைக் கல்லினாலான நிற்கும் நிலையிலான கணபதிசிலை. (பெருங்கற்காலம்) கந்த ரோடையில் தற்போது அமைந்து காணப்படும் அருளானந்தப் பிள்ளையார் கோவிலின் உருவாக்கம் மற்றும் தோற்ற வரலாற்றுடன் இச்சிற்பத்தினை தொடர்புபடுத்தி ஆராய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருள்மிகு மல்வில் கிருஷ்ணன் கோவில் - வரலாற்றுத் தொகுப்பு என்ற தலைப்பில் 04,பங்குனி, 2011 வெள்ளிக்கிழமையன்று உதயன் நாளேடு விரிவரன ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது. அவற்றில் இடம்பெற்றிருந்த இக்கோயில் தொடர்பான ஐதீகங்கள், மரபுகள் மற்றும் இடப்பெயர் வரலாறுகள் இக்கோயில் பற்றிய விரிவான வரலாற்றாய்விற்கு உதவுபவையாக உள்ளன. இவ்வாலயத்தின் தோற்றம் தொடர்பான ஐதீகமானது மிகவும் தனித்துவமானது. 'சுமார் 300 வருடங்கட்கு முன்னர் இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்ட காலத்தில் ஒருநாள் இரவுநடுநிசி நேரத்தில் வித்தியாசமான முறையில் சங்கொலிக்கும் சத்தத்தினைப் பலர் கேட்டனர். அந்த ஒலி எங்கிருந்து வருகின்றது எனத் தெரியாமல் அப்பகுதி மக்கள் திகைத்தனர். மறுநாள் காலையில் சங்கொலி கேட்ட திசையை நோக்கிமக்கள் தேடிச்சென்று பார்த்தபோது எதையும் காணாமல் இருந்த நிலையில் மறுநாள் அதேநேரம் அந்தஒலி கேட்டபோது அனைவரும் அவ்வொலியைத்தேடிச் சென்றனர். அப்போது அங்கு ஒரு குளம் காணப்பட்டது. அக்குளத்திற்கு வடக்குப்புறமாக உள்ள காணியொன்றிலிருந்து சங்கொலி கேட்பதை உணர்ந்தனர். பின்னர் அந்தக்காணிசங்குக் கேணிஎனப் பெயரிடப்பட்டது. இப்பெயரில் இன்று அங்கு ஒருபெரிய தென்னந் தோட்டம் காணப்படுகின்றது. '(பக்:17).

'அந்தக்காலத்தில் அப்பகுதியில் வசித்து வந்த தானத்தார் என்னும் வம்சத்தில் உதித்த பெரியார் சேதர் புண்ணியர் என்பவர் தனது காணியில் ஆலயம் ஒன்றினை சிறுகொட்.டிலாக அமைத்து பூஜித்து வந்தார் என்றும் பின்னர் அவ்விடத்தில் மூலஸ்தானம் , மகாமண்டபம் ஆகியனவற்றை அமைத்தார் என்றும்' ஓர் ஐதீகம் இற்றைவரைக்கும் இயக்கச்சியை சூழ்ந்த கிராமங்களில் நிலவிக் கொண்டிருப்பதனை அவதானிக்க முடியும். தானத்தார் என்போர் கோயில்களை பரிபாலிப்பதற்காக பல்லவர் ஆட்சிக்காலப் பரப்பிலிருந்து நியமனம் பெற்றோராவர். அந்நிலமை பின்னர் சாதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுகளில் ஒன்றாக மாற்றமடைந்து விட்டமையை காணலாம். சோழர் காலத்திலும் அதற்குப் பின்னரும் தானத்தார், இடங்கையர்,வலங்கையர் போன்ற வணிக கணத்தினருடன் இணைந்து கோயில்களைப் பரிபாலித்திருந்தமையை இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் கிடைத்திருந்த கல்வெட்டுக்கள், செப்பேட்டுச் சாசனங்கள் என்பன உறுதிப்படுத்துகின்றன. அப்பின்னணியில் இயக்கச்சியிலும் புராதனசிவன்கோவிலை தானத்தார் பரிபாலித்திருந்தனர் என்பதனை அங்கு நிலவும் ஐதீகங்கள் உறுதிப்படுத்துகின்றன.

சேதர் என்ற வம்சத்தோற்றம் யாழ்ப்பாணத்திலும் வடமராட்சியின் கண் நிலவிக் கொண்டிருப்பதனை தற்போதும் காணலாம். சேது இராமன், சேதுசங்கரன், சேதுதிவாகரன் (சேந்தன் திவாகரன்) போன்ற பெயர் வரிசைசேதர் பாரம்பரியத்தில் வருவோருக்கு இடப்படும் பெயராக இருப்பதனைக் காணலாம். சேதர் கந்தர்,சேதர் முக்கந்தர் ஆகியபதங்கள் உயர்மட்டத்திலுள்ள நிர்வாக அதிகாரிகளது பெயர்களாக ஒல்லாந்த பதிவேடுகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இப்பின்னணியில் இயக்கச்சியில் இருந்த சேதர் புண்ணியர் பரம்பரையானது ஒல்லாந்தர் காலப்பரப்பில் அங்கு நிர்மாணிக்கப்பட்ட இந்து ஆலயங்களுக்கு அறக்கொடைகளால் போஜிப்பவர்களாக வாழ்ந்திருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு.

வடமராட்சியிலுள்ள வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கும் இயக்கச்சியிலுள்ள மல்வில் கிருஷ்ணன் கோவிலுக்கு மிடையிலான பண்பாட்டுத் தொடர்புகள் மிக நீண்டகாலமாக இருந்து வருகின்றமை இவ்வாலயம் பற்றிய ஒருமுக்கியமான செய்தியாகும். நாமம் வழிவந்த தொடர்பாக அது எடுத்துக் காட்டப்படுவதனைக் காண்கின்றோம். இருந்தும் ஞாயிற்றுக்கிழமை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லிபுரத்தினைப் போன்று இங்கும் விசேடதினமாகக் கருதப்பட்டு வருகின்ற ஒருபண்பாடு இற்றைவரைக்கும் தொடர்கின்ற ஒரு வரன் முறையைக் காண்கின்றோம். சூரியனுடைய தினமான ஞாயிற்றுக்கிழமை சமண சமயத்தவருக்கும் விசேடதினமாகையால் அம்மதத்தினுடைய செல்வாக்கு இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவிலில் இருந்திருக்கவேண்டும் எனக் கொண்டால் யக்'- நாகமரபின் மத்தியில் இக்கோயில் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வரமுடியும். இக்கோயிற் சுற்றாடலில் சிதைந்து காணப்படுகின்ற சிற்பக் குறைகளைப் பார்க்கும்போது சமணமதத்தின் செல்வாக்கு முன்பொருகாலத்தில் அத்தலத்தில் நிலைபெற்றிருக்க வேண்டும் என்பதனை நினைவூட்டுகின்றது. இப்பின்னணியில் மல்வில் கிருஷ்ணன் கோவிலின் தொன்மையை கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்திற்கு எடுத்துச் செல்லமுடியும். இதனை மேலும் உறுதிப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் இத்தலத்தில் மேற்கொள்ளவிருக்கும் தொல்லியல் மேலாய்வுகளே ஆதாரமாக அமையும் என எதிர்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மல்வில் மாயவன் மலரடியான்***

***அமரர் சின்னத்தம்பி ஐயாவின் நினைவுகளில்......***

அமரத்துவம் அடைந்த கார்த்திகேசு சின்னத்தம்பி ஐயா அவர்களின் ஞாபகம் குறித்து வெளியிடப்படும் 14 -ம் ஆண்டு நினைவுமலர் வெளியீடு குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

பலதசாப்தங்களாக மல்வின்கிருஷ்ணன் கோயிலில் பரம்பரை பூசகராக இருந்து ஆலயத்தின் வளர்ச்சிக்கும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் பங்காற்றியவர். இவர் ஆலயத்தில் பூசகராக சேர்ந்த காலத்தில் தான் இவரது ஆசியுடன் எனது திருமணம் மிகவும் சிறப்பான முறையில் நடந்தேறியதுடன் எமது மூன்று பிள்ளைகளின் 41 - ம் நாள் ஆலயதரிசனம் பிள்ளைகளுக்கான அமுதூட்டல் நிகழ்வுகள் யாவும் இவரது ஆசிர்வாதத்துடன் நடந்தேறியமையும் என் நினைவுகளில் நீங்கா இடம்பிடித்துள்ளது.

ஆலய பூசகருக்கு உரித்தான தனித்துவமான பண்புகளை கொண்டிருந்த மாயவன் அடியவர்களுக்கு நேரும் சிறு பிணிகளை எல்லாம் விபூதி என்னும் அருமருந்தினால் தனித்துவிடும் சிறப்பம்சத்தினை தன்னகத்தே கொண்டு மிளிர்ந்தவர். அடியவர்கள் நினைத்த காரியத்தினை வெற்றி பெறச் செய்வதில் இவர் கொண்டிருந்த மாயவனின் அருட்காடாட்சம் இவரும் ஆலயமும் முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்வதற்கு வழிவகுத்தது.

மேலும் அடியவர்களை அன்பாக நடத்தும் பண்பு விருந்தோம்பல் போன்ற இன்னோர்ரன்ன சிறப்பம்சங்களை கொண்ட ஐயா அவர்களைப்பற்றி சொல்வதற்கு வார்த்தைகள் பல இருந்தாலும் என் நெஞ்சின் பாற்பட்டவற்றை வெளிப்படுத்தி எம் மனதில் நீங்கா நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஐயா அவர்களிற்கு என்று என்றும் இதய அஞ்சலிகள்

**திருமதி அ. தர்மகுலசிங்கம்**
(ஓய்வு நிலை நூலகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்வில் கிருஸ்ணனின் அறநெறி சமூக விழா

அமரசிங்கம் கேதீஸ்வரன் BA(Hons) M.Phil(ECN)
பிரதி திட்டமிடல் பணிப்பாளர்
மாவட்டச்செயலகம்

கிளிநொச்சி

சைவ ஆலயங்கள் ஆற்றும் சமயப்பணிகளினால் மனிதனுக்கு அமைதியும் மன நிம்மதியும் ஏற்படுவது போல் அவை ஆற்றும் சமூகப்பணிகளினால் நல்ல ஒழுக்க விழுமியமுள்ள சமூகம் உருவாக்கப்படுகின்றது. நம்பிக்கையை அதிகம் கொண்டியங்கும் சமூகத்தில் சமய விழாக்களும் பூசைகளும் பலத்த ஆரவாரத்துடன் மக்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெறுமளவிற்கு சமூகமயமான பண்பு சார் செயற்பாடுகளை ஊக்கப்படுத்தும் செயற்பாடுகள் ஆலயங்களை மையப்படுத்தி இடம்பெறுவதில்லை என்ற விமர்சனங்களுக்கு மத்தியில் இலட்சக்கணக்கான மாத வருமானத்தைப் பெறும் பல ஆலயங்கள் சமூக நோக்கோடு ஆயிரங்களை கூட செலவழிப்பதில்லை என்ற உண்மையை ஏற்றுத்தான் ஆக வேண்டும். இந்த முரண்நிலை இந்து சமய வளர்ச்சியையும் பாதித்துள்ளது. மதமாற்றம் அதிக வேகத்துடன் வளர்ந்து செல்வதில் இதுவும் ஒரு உந்தல் காரணியாக இருந்து வருகின்றது. இவ் வகையில் பச்சிலைப்பள்ளியில் புகழ் பூத்த ஆலயங்களில் ஒன்றான மல்வில் கிருஸ்ணன் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினத்தன்று இடம்பெறும் சமூக விழாவும் அது சார்ந்த சமூக செயற்பாடும் இப்பிரதேச ஆலய பண்பாட்டில் பலரையும் ஆறுதல் படுத்தும் ஒரு நிகழ்வாக இருந்து வருகின்றது.

2011ஆம் ஆண்டு சிவராத்திரி தினத்தினை கொண்டாடுவது தொடர்பில் இவ்வாலயத்தின் இளைய வயதினரான தர்மகர்த்தா திரு.சி.கமலரூபன் என்னை அணுகியபோது சமய சடங்குகளும் விழாக்களும் சமூகத்தின் நேர் மனப்பாங்கையும், பாராட்டி ஊக்கப்படுத்தும் உற்சாகத்தையும் ஏற்படுத்தும் வகையில் அறநெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக விழாவாக இதனை உருமாற்றுமாறு நான் கொடுத்த ஆலோசனையை ஏற்றுக்கொண்ட அவரின் நேர்மனப்பாங்கு இன்று இம்மாவட்டம் முழுவதிலும் ஒரு விழாவாக மாறியிருக்கிறது. சமூகத்திற்கு நல்லது செய்பவர்களை அவர்கள் வாழும் காலத்திலே கௌரவித்தல் அவர்கள் கல்வி மற்றும் சமூகநிலை என்பவற்றிற்கு அப்பால் எந்த நிலையில் இருந்தாலும் 65வயதுக்கு மேல் அவர்களின் சமூக பங்களிப்பை குறித்து பாராட்டி பட்டம் வழங்கும் ஒரு நடைமுறையை உருவாக்கியிருக்கின்றோம்.

இதன் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிலும் இச்சமூகத்திற்காக கல்விப்பணி, சமயப்பணி, சமூகப்பணி, கலைப்பணி, தொழில் முயற்சியாண்மைப்பணி என பல்வேறு தளத்தில் சாதனை படைத்தவர்களில் ஐந்து பேருக்கு பட்டம் வழங்குதல், பதக்கம் வழங்குதல், பாமடல், மெச்சுரை வழங்குதல் என இன மத மொழி வேறுபாடுகள் இன்றி பாராட்டப்பட்டு வருகின்றனர். அதனை விட இப்பிரதேச செயலகப் பிரிவிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் பல்கலைக்கழகங்களுக்கு உயர் கல்விக்காக தெரிவு செய்யப்படுபவர்கள் எல்லோரையும் அழைத்து மதிப்பளிக்கப்பட்டு பதக்கமும் பணப்பரிசிலும் வழங்கப்படுகின்றது. சிறப்பு துறைச் சாதனை நிலை நாட்டும் பிள்ளைகளுக்கு சமூகத்திலுள்ள பல பெரியவர்கள் தாங்களாக முன்வந்து நினைவு பரிசிலை இதற்கு மேலதிகமாக வழங்கி வருவதனால் சாதனை நிலை நாட்ட வேண்டுமென்ற உந்துதல் ஊக்கம் பிள்ளைகளிடையே ஒரு ஊக்க விசையாக மாறி இருக்கிறது. அதனை விட தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் சிறப்புச்சாதனை படைப்பவர்கள் எந்த துறையாயினும் அவர்களுக்கும் மதிப்பளித்து பதக்கமும் பரிசும் வழங்கப்படுகிறது. அதனைவிட ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் தேர்வில் சித்தியடைந்து வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சாதனை செய்யும் அனைத்து பிள்ளைகளையும் அழைத்து மேடையேற்றி பதக்கமணிவித்து பணப்பரிசும் வழங்கி வருகின்றோம். அத்துடன் பளை பிரதேச செயலக பிரிவிலுள்ள அனைத்து அறநெறிப் பாடசாலை பிள்ளைகளுக்கிடையில் மாலை கட்டுதல், கோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுதல், தேவாரபாராயணம், பேச்சு, கவிதை, கட்டுரை என பல்வேறு போட்டிகள் நடாத்தப்பட்டு பெறுமதியான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி வருகின்றனர். இதனால் அறநெறி சார் செயற்பாடுகள் புது உத்வேகத்தை பெற்றுள்ளன.

கடந்த 12 ஆண்டுகளாக தொடர்ந்து நடாத்தப்படும் இவ்விரவு நிகழ்வில் சமூக மட்டத்தில் சிறப்பார்ந்த சேவைகளை செய்து வருகின்ற பெரியார்களும் பிரதம விருந்தினராகவும் பிரதேச மட்டத்திலிருந்து ஒரு முன்மாதிரியாக (Role Model) வெளிக் கிளம்பியோரை சிறப்பு, கௌரவ விருந்தினர்களாக அழைக்கப்படுவதுடன் அவர்களின் சேவையும் மெச்சுரைக்கப்படும் பண்பாட்டு நிகழ்வு இடம்பெறுகிறது. இதனை தலைமையேற்று தொடர்ந்து நடாத்தும் வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டிருப்பதுடன் ஒரு சிறிய நேர் மனப்பாங்கு கொண்ட நண்பர்கள் எல்லா வேலைகளையும் கூடி செய்து நிறைவேற்றி வருவது ஒரு வழக்கமாக்கப்பட்டுள்ளது. சமூகத்தின் எல்லாத் தரப்பிலிருந்தும் மதிப்பளிப்புக்காக பல்வேறு சமூக தடைகளை தாண்டி சமநீதியுடன் நிகழ்வுகள் நடாத்தப்படுவது பலரையும் புழகாங்கிதம் கொள்ள வைத்திருக்கிறது.

பச்சிலைப்பள்ளியில் நடாத்தப்படும் அறநெறி சமூக விழா மதிப்பை பெறுதல் இன்று எல்லோர்க்கும் ஒரு கௌரவமும் மதிப்பும் வாய்ந்த செயற்பாடாக மாறியுள்ளது. இந்த வகையில் இதுவரை 300 வரையிலான புலமைப்பரிசில் வெற்றியாளர்களும் 200 வரையான பல்கலைக்கழக மாணவர்களும் 60 வரையான சமூக பெரியவர்களும் மதிப்பளிப்பு பெற்றிருக்கிறார்கள். இவர்களின் முறைகள் ஆவணமாக்கல் ஒன்றை மேற்கொள்ளும் வகையில் பெயர் வாரியான தொகுப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மதிப்புப் பெருநிகழ்வு

| இல | மதிப்பளிக்கப்பட்டவர் வழங்கப்பட்ட கௌரவ பட்டம் | மதிப்பளிப்பு ஆண்டு |
|---|---|---|
| 01 | ச.அம்பிகைபாகன்<br>பிரதேசவைத்திய அதிகாரி பளை<br>வைத்தியமாமணி | 2012 |
| 02 | ந.தாமோதரம்பிள்ளை<br>ஓய்வு நிலை அதிபர் பேராலை<br>ஆசிரியமாமணி | 2012 |
| 03 | வே.சுப்பிரமணியம் சுதேச மருத்துவர் மாசார்<br>வைத்தியமாமணி | 2012 |
| 04 | வே.கணபதிப்பிள்ளை புராணிகர் முருகந்தநகர்<br>புராண வித்தகமாமணி | 2012 |
| 05 | திரு.ப.அரியரட்ணம் ஓய்வுநிலை<br>மேலதிகமாகாணகல்விப் பணிப்பாளர்<br>பெரியபளை கல்விமாமணி | 2013 |
| 06 | சு.வினாசித்தம்பி ஓய்வுநிலை<br>கிராமசேவகர் பளைநகரம்<br>சமூகமாமணி | 2013 |
| 07 | இந்திரா குமாரவேலு<br>ஓய்வுநிலை அதிபர் புலோப்பளை<br>கல்விமாமணி | 2014 |
| 08 | பராசக்தி தாமோதரம்பிள்ளை<br>ஓய்வுநிலை ஆசிரியர் பேராலை<br>ஆசிரியமணி | 2014 |
| 09 | க.குலசேகரம் நடிகர் நாடக ஆசிரியர<br>ஆழியவளை<br>கலாமணி | 2014 |
| 10 | சி.வல்லிபுரம்<br>ஆர்மோனிய கலைஞர்கோவில் வயல்<br>கலாமணி | 2015 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | மதிப்பளிக்கப்பட்டவர் வழங்கப்பட்ட கௌரவ பட்டம் | மதிப்பளிப்பு ஆண்டு |
|---|---|---|
| 11 | க.சிவராசா பதிவாளர் இயக்கச்சி<br>சமூகமாமணி | 2015 |
| 12 | ஆ.இராசரத்தினம் ஓய்வுநிலை உப தபாலகர் சோரன்பற்று<br>சமூகமாமணி | 2016 |
| 13 | யே.யேசுதாசன் ஓய்வுநிலை கிராம அலுவலர் கிளாலி<br>சமூகமாமணி | 2016 |
| 14 | க.பொன்னம்பலம் சமூக சேவை தொண்டர் சங்கத்தார்வயல்<br>சமூகமாமணி | 2016 |
| 15 | க.பொன்னம்பலம் இளைப்பாறிய அஞ்சல் ஊழியர் சோரன்பற்று<br>கலைமாமணி | 2017 |
| 16 | மு.செல்லத்துரை புராணிகர் வேம்பொடுகேணி<br>கலைமாமணி | 2017 |
| 17 | கு.கந்தசாமி சிற்பகலைஞர் மாசார்<br>கலைமாமணி | 2017 |
| 18 | வி.இராசேந்திரம் இளைப்பாறிய உப தபாலதிபர் ஆழியவளை<br>கலைமாமணி | 2017 |
| 19 | செ. சுப்பிரமணியம் ஓதுவார் வட்டக்கச்சி<br>கலைமாமணி | 2017 |
| 20 | இராசம்மா இராசரத்தினம் ஓய்வு நிலை அதிபர் முல்லையடி<br>கல்விமாணி | 2018 |
| 21 | கு.ஐயாத்துரை கட்டிட கலைஞர் மாசார்<br>கலாமணி | 2018 |
| 22 | நா.முருகையா ஆன்மீக்தொண்டர் முகமாலை<br>கலாமணி | 2018 |
| 23 | சு. புத்திசிகாமணி இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் உடுத்துறை<br>சமூகமாமணி | 2019 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | மதிப்பளிக்கப்பட்டவர் வழங்கப்பட்ட | மதிப்பளிப்பு ஆண்டு |
|---|---|---|
| 24 | அன்னமுத்து தர்மகுலசிங்கம் இளைப்பாறிய நூலகர் பெரிய பளை **சமூகமணி** | 2019 |
| 25 | கு.ந.பாலச்சந்திரன் இளைப்பாறிய பிரதேச சபை செயலாளர் முகமாலை **சமூகமணி** | 2020 |
| 26 | அன்ரன் அன்பழகன் இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் பெரிய பளை **கலாமணி** | 2020 |
| 27 | க.காசிப்பிள்ளை ஓய்வுநிலை கால்நடை வெளிக்கள போதனாசிரியர் புலோப்பளை **சமூகமாமணி** | 2021 |
| 28 | இ.இராமலிங்கம் ஓய்வுநிலை கோட்டக்கல்வி அலுவலர் புலோப்பளை **கல்விமாமணி** | 2020 |
| 29 | பரமேஸ்வரி பத்மநாதன் இளைப்பாறிய மேற்பார்வை குடும்பநல அலுவலர் **சமூகநலமாமணி** | 2021 |
| 30 | சி.கனகசிங்கம் களஞ்சிய காப்பாளர் முருகந்தநகர் **கலாமணி** | 2021 |
| 31 | ம.குமாரவேலு திடீர் மரண விசாரணை அதிகாரி சமாதான நீதவான் புலோப்பளை **சமூகமாமணி** | 2022 |
| 32 | சி.முத்துப்பிள்ளை ஓய்வுநிலை விவசாய போதனாசிரியர் **சமூகமாமணி** | 2022 |
| 33 | நடேசப்பிள்ளை இளைப்பாறிய தபால் சேவகர் புலோப்பளை **சமூகமாமணி** | 2022 |
| 34 | செ.இரத்தினகுமார் கிராமிய நாட்டுக்கூத்து **கலைமணி** | 2019 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் உள்ளத்து வரிகள்.......

ஏமக்காய் வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டி சென்ற எம் தந்தையாரை நினைந்து அனுஷ்டித்து நூல் வெளியிடப்படுவது அவரின் அளப்பரிய அறப்பணியின் வெளிப்பாடாகும்.

மந்துவிலில் கார்த்திகேசு சேதுப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது புத்திரனாக அவதரித்து யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தில் கல்வியை கற்றவர். சிறுவயது முதல் ஆன்மீக ஈடுபாடு கொண்டவர். புராண இதிகாசங்களை துன்னாலை வேலுப்பிள்ளை வாத்தியார், மந்துவில் சுந்தரம், சின்னத்தம்பி வாத்தியார் போன்றோரிடம் ஐயந்திரிபுற கற்றறிந்தார். கிடைத்த அரச பதவியினை உதறிவிட்டு பெற்றோருடன் விவசாயத்திலும் சிறியதந்தையாருடன் ஆலயப் பணிகளிலும் உதவினார். சில ஆண்டுகள் வல்லிபுரக்குறிச்சியைச் சேர்ந்த தந்தைவழி உறவினருடன் திருகோணமலை பட்டினத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

பருவமதில் தாய்வழி உறவில் சிதம்பரப்பிள்ளை நாகமுத்து தம்பதிகளின் ஐந்தாவது புதல்வி இரத்தினத்தை கரம் பிடித்தார். இவர் இரு ஆண்மகவுக்கு தந்தையாகினார். சிறியதந்தையார் சின்னையா தனது முதுமையினை உணர்ந்து பெறாமகனிடம் ஆலயப் பொறுப்பினை 1967-ம் ஆண்டு ஒப்படைத்தார். ஆலய பராமரிப்புப் பணிகள், கிரியை ஒழுங்குகள், திருப்பணிகள் அன்றிலிருந்து பெருந்திருவிழாக்களை சிறப்பாக நடாத்தி வந்தார். களஞ்சிய அறை, வசந்த மண்டபத்தினை தனது முயற்சியிலும், சுற்றுக்கொட்டகை கண்டாவளை சிதம்பரப்பிள்ளை அவர்களின் பங்களிப்புடனும் நிறைவேற்றினார்.

ஆலயத்தின் வழக்கமாக கைவிசேடம் வழங்குதல், வேலைவாய்ப்பு, , வெளிநாட்டுப்பயணம், தொழில் முயற்சி ஆரம்பித்தல், பரீட்சைகளுக்கு தோற்றுவோருக்கு ஆசீர்வாதம் வழங்குதல், புதுமனைப்புகுவிழாவிற்கு படமெடுத்தல், திருமண வைபவம், அன்னப்பிராசனம் செய்தல், காதுகுத்துதல், போன்றவற்றுடன் பசித்தோருக்கு உணவளித்தல், கிராமத்தில் முரண்பாடுகள் நிலவும்போது தீர்த்து வைத்தல் போன்றனவும் ஐயாவினால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. அவரது எண்ணங்களும் செயற்பாடுகளும் பரிணாம வளர்ச்சி பெற்று மிக சிறப்பான முறையில் வைகுண்ட ஏகாதசி, பீமஏகாதசி, மஹாசிவராத்திரி, அறநெறிச்சமூகவிழா, சித்திரைப் புதுவருடப்பிறப்பு, சங்காபிஷேம், ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி, 12 திருவிழாக்கள், சனீஸ்வர ஹோமம், தீபாவளி நரகாசுரன்போர், விளக்கீடு, திருவெம்பாவை, ஞாயிறு தோறும் அன்னதான மண்டபத்தில் இடையறா அன்னதானப்பணி என நீண்டு செல்கின்றது. அவரது எண்ணங்கள் பல இன்னும் நிறைவேறவுள்ளன. 40 ஆண்டுகள் ஆற்றியபணி தொடரட்டும்.

ஐயாவின் பணிதனை பாராட்டப்பட வேண்டும், அவரை கௌரவிக்க வேண்டும், என பலரது அவா ஐயாவின் நினைவாக அறக்கட்டளை ஆரம்பித்து அந்நிதியினூடாக சமூக நலப்பணிகளும், அறநெறிச் சமூக விழாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்ற வேண்டுமென எமது ஆலோசனை குழு உறுப்பினர் திரு. அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்களது சிந்தனை வடிவம். திரு. நாகமுத்து சுசிதரன் ஐயாவின் நினைவு நாளினை அனுஷ்டிப்பதுடன் சிறிய நினைவிடம் ஒன்றை அமைக்கவேண்டுமென எண்ணம். எல்லாவற்றுக்கும் மேலாக மாசார் சின்னத்தம்பி அவர்கள் இவ்வாலயத்திற்கு திருவூஞ்சல் பதிகத்தினை உருவாக்கி பாடிய பேறுடையவர். அது ஆவணமாக்கப்படவில்லை மேலும் வரலாற்று தொன்மைமிகுந்த மல்வில் மாயவனின் திருத்தல வரலாறு முழுமையாக ஆவணமாக்கப்பட வேண்டும் என்ற உயரிய சிந்தனை, அமரர் சின்னத்தம்பி ஐயா இப்பிரதேசத்திற்கு ஆலயம் சார்பாக ஆற்றிய பணிகள் ஆவணப்படுத்தப்படவேண்டும். அவரது அன்னதானப்பணி தொடர்ந்து நிலைபெற வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் திரு. திருமதி பிரதாபராஜன் குணரஞ்சிதம் தம்பதிகள் தமது அருந்தவப்புதல்வி நினைவாக "ஷரன்ஜா" மண்டபத்தினை நிறுவியதுடன் இம் மலர் இவ்வாண்டு வெளிவரவேண்டுமென்ற விடா முயற்சியுடன் 14 வது நினைவுநாள் நிகழ்வில் மலர் வெளியிடப்படுவது மகிழ்ச்சிக்குரியது நன்றி கூறப்படவேண்டியது.

இந்நினைவு கூரலுக்காக உழைக்கும் தர்மகர்த்தா சின்னத்தம்பி நினைவு அறக்கட்டளை நினைவுநாள் ஏற்பாட்டுக்குழுவுக்கும் மற்றும் ஆர்வலர்கள், தொண்டர்கள், உபசரணையாளர்கள் மலராக்கத்திற்கு ஆக்கம் வழங்கிய பெரியோர்கள், நினைவு பேருரை ஆற்றியவர்கள், உறுதுணையாக என்றும் கரம் கொடுக்கும் நித்திய தொண்டர்கள், குருமார், அர்ச்சகர்களுக்கும் இருகரம் கூப்பி நன்றிகள் கூறுகின்றோம் நலமுடன் வாழ எல்லாம் வல்ல மாயவனை வேண்டுகின்றோம்.

## நினைவு அறக்கட்டளை

திரு. அ. கேதீஸ்வரன் (ஆலோசகர், பிரதிதிட்டமிடல் பணிப்பாளர்)
திரு. நா. சுசிதரன் (தலைவர், அஞ்சலர்)
திருமதி பி. குணரஞ்சிதம் (செயலாளர், ஓய்வுநிலை கிராமஅலுவலர்)
திருமதி பா. கமலம்மா (பொருளாளர், சமூகசேவகி)
திரு. கு. தனபாலசிங்கம் (உறுப்பினர், சமூகசேவகர்)
திரு கி. ஜெயராசசிங்கம் (உறுப்பினர், சமூகசேவகர்)
திருமதி சி. இரத்தினம் (தர்மகர்த்தா)
திரு. சி. கமலரூபன் (குடும்ப உறுப்பினர்)

## நினைவு ஏற்பாட்டுக்குழு

திரு. ஆ. இராசரத்தினம்
திரு. க. வன்னியசிங்கம்
திரு. ச. பகீரதன்
திரு. இ. சிவராசா
திருமதி கு. வாசுகி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







திருக்கணிதம் சாவகச்சேரி T.P: 0773248817

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org